மலர்-5 இதழ்-132 16 - 28 பிப்ரவரி 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

e- magazine
www.aanmeegamalar.com



# தாய் தந்தையை மதிக்காதவர்கள் ஹீனமானவர்கள்: வேதம் கூறும் உண்மை



# மூச்சுவிடும் பைரவர்

சிவன் ஆலயங்களில் மட்டுமே இருக்கும் பைரவர் வைணவ திருத்தலங்களில் ஒன்றான திருக்குறுங்குடி நம்பி கோவிலைக் காக்கும் தெய்வமாக இருக்கிறார். கோவிலின் பிரகாரத்தை சுற்றி வரும் போது இருக்கிறார் இந்த பைரவர். பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்ததால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை சிவபெருமான் இந்தத் திருக்குறுங்குடி தலத்தில் போக்கிக் கொண்டார் என்பதால் அவருடைய அம்சமான பைரவர் அந்த நற்பணிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்வாறு இங்கு காவல் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார்.

இந்த கால பைரவருக்கு இடது பக்கத்தில் ஒரு விளக்குத் தூண் உள்ளது. இதன் மேல் பகுதியில் பைரவரின் முகத்தின் அருகில் ஒரு விளக்கும் கீழ்ப் பகுதியில் இன்னொரு விளக்கும் உள்ளது. இவை தவிர இரண்டு சர விளக்குகளும் உண்டு. இந்த நான்கு விளக்குகளிலும் உள்ள தீபம் ஒளி சிந்தி பைரவரின் முழு ரூபத்தையும் தெளிவாகக் காட்டுகின்றன. மேலே உள்ள விளக்கின் தீபத்தின் ஜ்வாலை மட்டும் காற்று பட்டது போல் அசைகிறது. பிற மூன்று விளக்கு ஜ்வாலைகளும் சீராக எந்தச் சலனமுமில்லாமல் எரிந்து கொண்டிருக்கின்றன. மேல் விளக்கு தீபத்தின் ஜ்வாலை மட்டும் எப்படி அசைகிறது? அது பைரவரின் மூச்சுக் காற்று அந்த தீபத்தில் மட்டும் படுவதினால் ஏற்படும் அசைவு ஆகும். பைரவர் மூச்சை இழுக்கும் போது ஜ்வாலை அவரை நோக்கித் திரும்பியும் விடும் போது எதிர் திசையில் விலகியும் அசைகிறது. அது போல் அவரது கண்கள் தீப ஆராதனை ஒளியில் அசைவதை இப்போதும் நேரில் கண்டு தரிசிக்கலாம்.

# பணப்பிரச்சனை, படிப்பில் மந்தம், பல தோஷங்களை போக்கும்

# சஞ்சீவி புல்



சிவனுடைய ரோமம் என்று கூறப்படும் இந்த சஞ்சீவி புல்லை பணம் வைக்கும் இடங்களில் வைக்கும் பொழுது, அந்த இடத்தில் பணம் பல மடங்கு பெருகும். அடகு சென்ற நகைகள் மீண்டும் திரும்பவும் இந்த புல்லை நகை வைக்கும் இடத்தில் வைக்கிறார்கள்.

வாகன ரீதியான பயணங்களில் இருக்கும் பிரச்சனைகள், தோஷங்கள் நீங்க உங்களுடைய வாகனங்களில் சஞ்சீவி புல் ஒன்றை சிறிய குப்பியில் அடைத்து தொங்க விடலாம்.

அதுபோல் வீட்டில் செல்வம் பெருக பீரோவில் சஞ்சீவி புல் ஒன்றை பட்டுத் துணியில் கட்டி பணத்தோடு வைத்துக் கொள்ளலாம். குடும்ப ஒற்றுமைக்கு பூஜை அறையில் இந்த சஞ்சீவி புல் வைக்கலாம்.

இது ஒருசில நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்...

இந்த சஞ்சீவி புல் படிப்பு குறைவான மாணவர்களுக்கு வெள்ளி தாயத்தில் வைத்து கட்டிக் கொண்டால் சிறந்த கல்வி கிடைக்கும்.



# இரண்டு வடிவத்தில் காட்சிதரும் முருகப்பெருமான்

படைப்புத் தொழிலில் ஆணவம் முற்றியிருந்த பிரம்மதேவன் முருகப் பெருமானை சந்திக்க நேர்ந்தது. அப்போது பிரம்மனிடம் படைப்புத் தொழில் செய்யும் உனக்கு ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியுமா? என்று முருகப் பெருமான் கேட்கிறார்.

ஆனால், இந்தக் கேள்விக்கு பிரம்மனால், பதில் சொல்ல முடியவில்லை. இதனால், அவரது 4 தலைகளிலும் முருகப் பெருமான் குட்டினார். மேலும், கீழே விழுமாறு தம் திருவடி கொண்டு உதைத்து பிரம்மனை சிறையில் அடைத்தார்.

இதையடுத்து படைப்புத் தொழிலை முருகப் பெருமான் செய்தார்.

பிரம்ம தேவன் சிறையில் இருப்பதை நினைத்து மனம் வருந்திய திருமால் சிவபெருமானிடம் சொல்லி விடுதலை கிடைக்க வேண்டுகிறார். தொடர்ந்து, சிவபெருமான், முருகப் பெருமானிடம் பிரம்ம தேவரை விடுதலை செய்யும்படி கூறவே தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று முருகன், பிரம்மதேவரை விடுதலை செய்தார்.

இதைப் பார்த்து உள்ளம் மகிழ்ந்த சிவபெருமான் முருகனை தனது மடியில் தூக்கி வைத்துக் கொண்டு பிரம்மனுக்கு தெரியாத பிரணவ மந் திரத்தை நீ எனக்கு சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

இதை யாரும் அறிந்திடக் கூடாது என்பதற்காக சிவபெருமான் காதருகில் சென்று பிரணவ மந்திரத்தின் பொருளை உரைத்தார்.

இந்த நிகழ்ச்சி நடந்த தலம் தான் சுவாமிமலை தலம் என்று வரலாறு கூறுகிறது.

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் சுவாமிமலை 4ஆவது படை வீடாகும்.

### இரண்டு வடிவில் முருகன் காட்சி

இந்தக் கோயிலில் முருகனுக்கு விபூதி அபி ஷேகம் செய்யும் போது அருள் பழுத்த ஞானியாக பக்தர்களுக்கு காட்சி தருவார்.



சந்தன அபிஷேகம் செய்யும் போது பாலசுப்பிர மணியனாக கம்பீரமாக காட்சி தருகிறார்.

### சிவனும் முருகனும் ஒன்றே...

கோயில் கருவறையை உற்று நோக்கினால், சுவாமிநாத சுவாமி நின்றியிருக்கும் பீடம் சிவலிங்க ஆவுடையாகவும், அதன்மேல் எழுந் தருளியிருக்கும் சுவாமிநாத மூர்த்தி பாண

லிங்கமாகவும் காட்சி தருவது கண்களுக்கு தெரியும். இதன் மூலமாக சிவனும், முருகனும் வேறு வேறு இல்லை என்பது புலனாகும்.

இங்கு மூலவருக்கு எதிரில்மயிலுக்குப் பதிலாக யானை இருக்கிறது. இது ஹரிகேசன் என்ற அரக்கனை சுவாமிநாத சுவாமி வணங்கி வென்றதால், இந்திரன் தன் காணிக்கையாக இந்த ஐராவதம் யானையை தந்ததாக புராணம் கூறுகிறது.



இந்தக் கோயிலின் மேல் தளத்தை அடைவதற்கு 60 படிக்கட்டுகள் உள்ளது. சுவாமிநாதசுவாமி கோயிலில் உள்ள இந்த 60 படிகட்டுகளுமே புனிதமானதாக கருதப்படுகிறது. தமிழ் வருடங்கள் என்பது 60 ஆகும். அந்த தமிழ் வருடங்களின் தேவதைகள் சுவாமியை பிரார்த்தனை செய்து படிகளாக உள்ளதாக ஐதீகம்.

ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில வருடப்பிறப்பு மற்றும் தமிழ் வருடப்பிறப்பு ஆகிய நாட்களில் 60 படிகளுக்குமே வஸ்திரம் சாற்றி தேங்காய் பழம் வைத்து பாடல் பாடி பூஜைகள் செய்வார்கள். இதற்கு திருப்படி பூஜை என்று பெயர்.

திருமண வரம், குழந்தை பாக்கியம், குடும்ப ஐஸ்வர்யம், தீர்க்க ஆயுள், கல்வி கேள்விகளில் சிறந்த ஞானம், உயர் படிப்பு, வேலை வாய்ப்பு, உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு ஆகிய வற்றிற்காக பக்தர்கள் பெருமளவில் வருகை தரு கின்றனர். சுவாமி நாதனை வழிபட நமக்கு வரும் இடையூறுகள், நோய்கள், பிராணிகள், பூதம், தீ, நீர், வெள்ளம், செய்த பாவம் ஆகியவற்றால் விளையும் தீமைகள் விலகுகிறது.

வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள், மொட்டை போடுதல், சந்தனக்காப்பு, பஞ்சாமிர்த அபிஷேகம், பால் அபிஷேகம், அன்னதானம் வழங்குவது, நெய் விளக்கு ஏற்றுதல், பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், அபிஷேக ஆராதனைகள் செய்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

### குருவாக காட்சிதரும் முருகன்

ஆறு அடி உயரம் கொண்ட முருகப்பெருமான் கையில் தண்டத்துடன் தலையில் உச்சிக் குடுமியுடனும், மார்பில் பூணுலுடனும் காணப்படுகிறார்.

முருகப் பெருமான் சுவாமிநாதனாக வலது கையில் தண்டாயுதத்துடனும், இடது கையை தொடையில் வைத்தபடியும் யோகநிலையிலுள்ள குருவாக நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு காட்சி தருகிறார்.

இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி ஆகிய மூன்று சக்திகளும் ஒன்றாக அமையப்பெற்ற வஜ்ர வேலுடன் காணப்படுகிறார். கையில் தாங்கிய வேல் தான் ஆலயத்தின் கீழ் வீதியிலுள்ள நேத்திர தீர்த்தத்தை உண்டாக்கியது.

பூமாதேவி, பார்வதியின் சாபத்திற்கு ஆட்பட்டு இந்தக் கோயிலுக்கு வந்து தங்கி சுவாமிநாதப் பெருமானை வழிபட்டு தனது சாபம் நீங்கப் பெற்றாள்.

அதன் பிறகு இந்தக் கோயிலிலிருந்து செல்லாமல், நெல்லி மரமாக இத்தலத்திலேயே இருக்கிறாள்.

நான்முகம், பூமகள், இந்திரன் ஆகியோர் இந்தக் கோயிலில் வழிபட்டுள்ளனர். குருவாக இருந்து அருள் புரிந்தமையால், குருமலை, குருகிரி என்றும் சுவாமி மலைக்கு வேறு பெயர்கள் உள்ளன.





# மேல்நோக்கு கீழ்நோக்கு சமநோக்கு நாட்களும் பலன்களும்




தினசரி காலண்டரில் மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள் என்று போட்டிருக்கிறார்களே, அப்படியென்றால் என்ன தெரியுமா?

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள் இரண்டோடு, சமநோக்கு நாள் என்பதும் நடைமுறையில் உள்ளது.

இவை மூன்றும் அன்றைய நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய ஒன்பதும் (ஊர்த்துவமுக) நட்சத்திரங்கள் எனப்படுகின்றன. அதாவது, இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்களை மேல்நோக்கு நாட்கள்.

இவை மேல்நோக்கி வளர்கின்ற பயிர்களுக்காக விதைக்கவும், மரங்களை நடுவதற்கும், மேல் நோக்கி எழும் கட்டிடங்கள், உயரமான மதில் போன்றவற்றைக் கட்ட ஆரம்பிக்க உரிய நாட்கள் ஆகும்.

பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம்,பூராடம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள், (அதோமுக) நட்சத் திரங்கள், அதாவது, கீழ்நோக்கு நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்கள், கீழ்நோக்கு நாட்கள்.

இந்த நாட்களில் கிணறு வெட்டுதல், புதையல் தேடுதல், சுரங்கப் பணிகளை மேற்கொள்ளுதல், கிழங்கு வகைச் செடி களைப் பயிரிடுதல் முதலான பணிகளைச் செய்வது நல்லது.

அஸ்வினி, மிருகசீரிஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய ஒன்பதும் ( த்ரியக்முக ) நட்சத்திரங்கள், அதாவது, சமநோக்கு நட்சத்திரங்கள் ஆகும்.

இந்த நட்சத்திரங்கள் இடம் பெறும் நாட்கள், சமநோக்கு நாட்கள்.

இந்த நாட்களில் வாகனங்கள் வாங்குதல், செல்லப் பிராணிகள், பசு, காளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசக்கால் வைத்தல், வயல் உழுதல் ஆகிய பணிகளைச் செய்வது உத்தமம்.


வேலன்

நீங்களே இந்த நாட்களை தினசரி காலண்டர்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். தினசரி காலண்டரில் மேல்நோக்கு நாள், கிழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் என்று வார்த்தையில் பதிவு செய்யப்பட்டு இருக்கும். அல்லது குறியீடு முறையில் இருக்கும்..!!

– வேலன்,
போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# நோயிடா ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கரமடம் சந்த்ரமௌலீஸ்வர ஆலய

# பாலாலய நிகழ்வு

டில்லி அருகில் அமைந்த உள்ள நோயிடாவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கரமடம் சந்ரமௌ லீஸ்வர ஆலயம் அமந்துள்ளது. கடந்த 2007–ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. வேத சாஸ்த்திரபடி 12 வருடத்திற்க்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்பதால், வருகிற ஜூன் மாதம் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.



இதை முன்னிட்டு தை மாதம் 25 ம் தேதி (07.02.2022) திங்கட்கிழமை சப்தமி திதி அஸ் வினி நக்ஷத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 06–மணிக்கு மேல் 09.30 நாழிகைக்குள் காலை 09–மணிக்கு மேல் 10.30–மணிக்குள் மீன லக்னத்தில் ஆதி சங்கரர் சந்த்ரமௌலீஸ்வரர் மற்றும் சிவ பரிவார தேவதைகள் பாலாலயம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் பூரண அனுக்ரஹத்தாலும், சுந்தரராமன் ஸ்ரீனிவாசன், மற்றும் சோமாஸ்கந்த சாஸ்திரிகள் முன்னிலையில் நடைபெற்றது.

காலை 07 மணி முதல் 10.30 மணிக்குள் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜா மஹா சங்கல் பம், மஹந்யாஸ புரஸ்சர ஏகாதசவார ஸ்ரீ ருத்ர ஜப ஹோமம் தேவதா பாலாலயம், தேவதா ப்ரதிஷ்ட்டா கலச யாத்திரை, கலசாபிஷேகம் அலங்காரம் நடைபெற்றது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்: 9811161370



எஸ்.வெங்கடேசன்





# தாய் தந்தையை மதிக்காதவர்கள் நாய் மாமிசத்தை விட ஹீனமானவர்கள்



இந்த பூமியை விட
பாரமானவள் தாய்.
ஆகாசத்தை விட
உயர்ந்தவர் தந்தை.

ஒரு முறை தாய் தந்தையர்க்கு நமஸ்கரித்தால் பசுவை தானம் செய்த பலன் கிட்டும்.

ஸத்யம் – தாய்,

ஞானம் – தந்தை.

- ❖ பத்து உபாத்யாயர்களை விட ஆசார்யர் சிறந்தவர்.
- ❖ நூறு ஆசார்யர்களை விட தந்தை சிறந்தவர்.
- ❖ தந்தையை விட ஆயிரம் மடங்கு சிறந்தவள் ஜென்மாவை கொடுத்த தாய்.

தாய் தந்தைக்கு சேவை செய்தால்

- ❖ 6 முறை பூமண்டலத்தை ப்ரதக்ஷிணம்செய்த பலனும்,
- ❖ 1000 முறை காசி யாத்திரை செய்த பலனும்,
- ❖ 100 முறை ஸமுத்திர ஸ்நானம் செய்த பலனும் கிட்டும்.

எந்த மகன், மகள் மாத்ரு தேவதையை சந்தோஷமாக வைத்திருக்க மாட்டார்களோ, சேவை செய்யமாட்டார்களோ அவர்களின் சரீர மாமிசம் நாய் மாமிசத்தை விட ஹீனமானது என்று வேதம் கூறுகிறது.



கீதா–ராஜன்

எப்பேற்பட்ட சாபத்திற்கும் விமோசனம் உண்டு. பெற்ற தாய் கண்களிலிருந்து கண்ணீரை வரவழைத்தால் அதற்கு ஒரு லட்சம் பசுக்களை தானம் செய்தாலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஸ்வமேத யாகங்கள் செய்தாலும் போகாது.

தாயை விட சிறந்த தெய்வம் இல்லை, காயத்ரியை மிஞ்சிய மந்திரம் இல்லை என்கிறது வேதம்.

அந்த வேதவாக்கு...

ஓம் மாத்ரு தேவோ பவ...!

ஓம் பித்ரு தோவோ பவ...!

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# கட்டளையிடும் பிரார்த்தனை வேண்டாம் சரணாகதி பிரார்த்தனையே வெற்றிதரும்



ஒரு ஆசிரமத்தில் சீடன் ஒருவன் மரக்கன்று ஒன்றை நட்டுவிட்டு, ஆண்டவனே இம் மரக் கன்று சீக்கிரம் வளரவேண்டும்... எனவே நிறைய மழை பெய்யட்டும் என்று வேண்டினான்.

அவ்வாறே மழை அதிகம் பெய்தது. ஊறிப் போன மரக்கன்று அழுகிவிடுமோ என பயந்தான் சீடன். இறைவா, மழையை நிறுத்தி நல்ல வெயில் அடிக்கும்படி செய்..! என்று வேண்டினான்.

அப்படியே வெயில் அடித்ததில் செடி வாட ஆரம்பித்தது. பதறிப்போன சீடன், வெயிலும் வேண்டாம், மழையும் வேண்டாம், பனி பொழியட்டும்! என்று பிரார்த்தித்தான்.

தட்பவெப்பம் அடிக்கடி மாறியதில் தாக்குப் பிடிக்காமல் செடி பட்டுப் போனது.

இறைவனுக்கு கருணையே இல்லை என குருவிடம் முறையிட்டான் சீடன்.

எல்லாம் கேட்டபின் குரு சொன்னார், தன் படைப்பில் எதற்கு எப்போது என்ன தேவை என்பது இறைவனுக்குத் தெரியும். சுயநலத்திற்காக அதனை மாற்ற நினைத்து வேண்டினால் இப்படித்தான் ஆகும் என்றார்.

உணர்ந்த சீடன், மற்றொரு மரக்கன்றை நட்டுவிட்டு, இறைவா, இதை நீயே பார்த்துக் கொள்! என வேண்ட ஆரம்பித்தான்.

எனவே கட்டளையிடும் பிரார்த்தனை வேண்டாம் சரணாகதி பிரார்த்தனையே வெற்றிதரும் சிறப்பைத்தரும் என்பதை நமக்கு உணர்த்தியுள்ளான் சீடன்.

## aanmeegamalar.com வழங்கும்
# தினம் ஒரு திருக்குறள்










ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# மூன்று முறை இறைவனுக்கு தாய் தந்தையானவர்கள்



கம்சனை அழிக்க கிருஷ்ணர் வசுதேவர் தேவகி யிடம் ஏன் மகனாக பிறந்தார்....

சுதபா மாமன்னராக இருந்தார் அவரது மனைவி பிருச்னி.

உலகில் மக்கள் தொகை மிகக் குறைவாக ஆகி விட்டதே என்ற கவலையில் இருந்த பிரம்மா மக்கள் தொகையை அதிகரிக்க மன்னரை வேண்டி மக்கள் தொகை அதிகரிக்க உதவ வேண்டும் என்றார்.

ஆனால் சுதபாவும் பிருச்னயும் ஐம்புலன்களை யும் அடக்கி ஸ்ரீ மகாவிஷ்ணுவை நோக்கி கடும் தவம் இருந்தனர்.

பிரம்மாவின் சொல்லுக்கு மன்னரும் அரசியும் கீழ்படியாததால் கோபங்கொண்டு பெரும் புயலை உருவாக்கி தவத்தை கெடுக்க முயற்சித்தார்.

ஆனால் புயல் காற்று அவர்களின் தவத்தினை கெடுக்காது தூரே சென்றது.

மன்னரும், அரசியும் பரிசுத்தமான இதயம் கொண்டு இருந்தவர்களாக 12,000 தேவ ஆண்டுகள் தவம் இருந்தனர்.

ஸ்ரீ மகாவிஷ்ணு காட்சி அளித்து இருவரின் தவத்தை பாராட்டி வைகுண்டம் அழைத்தார்.

ஆனால் அவர்களோ வைகுண்டம் வர மறுத்து, ஸ்ரீமகாவிஷ்ணுவே மகனாக பிறக்க வரம் கேட்டனர்.

சரி என்று சொன்ன ஸ்ரீ மகாவிஷ்ணு சுதபாவிற்கும் பிருச்னிக்கும் பிருச்னிகர்பாவாக பிறந்தார்.

அடுத்த பிறவியில், சூதபா காஷ்யபராகவும், பிருச்னி அதிதியாகவும் இருந்த போது உபேந்திரனாக ஸ்ரீ மகா விஷ்ணு அவதரித்தார்.



புனிதவேல்

அடுத்த பிறவியில் வசுதேவராகவும் தேவகியாகவும் அவதரித்தவர் களுக்கு ஸ்ரீமகாவிஷ்ணு ஸ்ரீகிருஷ்ண ராக பிறந்தார்.

வசுதேவரும் தேவகியும்ஸ்ரீகிருஷ் ணர் பிறந்த பின் திருப்தி அடைந்த வர்களாக வைகுண்டம் போயினர்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572



# விருப்ப சந்தா



உங்கள் சிறு உதவி
எங்களுக்கு
பேருதவியாகும்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் வாயிலாக வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு

## விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

சந்தா செலுத்த விரும்புபவர்களை வரவேற்கிறோம்,
விருப்பமில்லை என்றால் எவ்வித கட்டாயமும் கிடையாது,
தொடர்ந்து நமது வாசகர்களாக தொடர்ந்து
நமது இதழை படித்து பயன்பெறலாம்.

நமது சேவையில்
பல்வேறு வளர்ச்சிப்
பணிக்கு பொருளாதார
ரீதியில் உதவி
தேவைப்படுவதால்
விருப்ப சந்தாவை
அறிமுகப்படுத்துகிறோம்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

Paytm | BHIM Baroda Pay | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)



நமது
இதழுக்கு
உதவி
செய்ய
விருப்பமுள்ள அன்பர்கள்
**ரூ.10** முதல்
விருப்ப சந்தா செலுத்தி
எங்கள் பணிக்கு
உதவலாம்.




AANMEEGA MALAR TRUST

# கொடிமர பூஜைக்கு முக்கியத்துவம்தரும் திருச்செந்தூர் கோயில்

## 21 மாட தேவதைகளின் ஆசியால் வாழ்வு சிறக்கும்

முன்னொரு காலத்தில் திருச்செந்தூர் சுப்பிர மணிய சுவாமி கோவிலில் மாசி திருவிழா நடைபெறவில்லை. காரணம் அங்கு கொடிமரம் இல்லை. ஆகவே திருச்செந்தூர் முருகன் கோவி லுக்கு கொடிமரம் வைக்க வேண்டுமென்று ஊர் கூடி பேசி முடிவெடுத்தனர்.

உடனே ஆறுமுகம் ஆசாரி என்பவர் தலை மையில் 21 பேர் கொண்ட குழு காக்காச்சி மலைக்கு (மேற்கு தொடர்ச்சி மலை) கொடி மரம் வெட்ட கிளம்பினர்.

திருச்செந்தூர் மந்தை அருகே உள் அம்மன் கோயிலில் அந்தக் குழுவினர் வேண்டச் சென் றனர்.

அம்மன் கோயில் முன்பு மற்றவர்கள் நின்று கொண்டனர். அம்மனை வணங்க ஆறுமுகம் ஆசாரி மட்டும் கருவறைக்குள் நுழைந்து அம்மனை வணங்கினார்.

அப்போது அம்மன் கண்களில் இருந்து நீர் வழிந்தது.

பயந்து போய் படபடத்து போன ஆசாரி, அம்மனே! ஏன் இந்த நிலை. தங்கள் கண்களில் நீர்வழிய காரணம் தான் என்ன? என்று கேட்டார்.

அம்மன் ‘மகனே நீங்கள் செய்யும் பணி நல்ல பணிதான். ஆனால் அந்த பணியில் ஈடுபடும் உன்னை தவிர வேறு யாரும் உயிரோடு திரும்ப மாட்டார்கள்.

அதை நினைத்து தான் எனக்கு வருத்த மாக உள்ளது. இதை நீ அவர்களிடம் சொல்லி விடாதே. இது ஆண்டவன் கட்டளை. இந்த நிலை தெரிந்த காரணத்தினால்தான் என கண் களில் கண்ணீர் வந்தது’ என்று கூறினார்.

உடனே அதிர்ந்து போன ஆறுமுகம் ஆசாரி அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்..

இதை வெளியே உள்ளவர்களிடமும் சொல்லக் கூடாது. சொன்னால் தெய்வக்குத்தமாகிவிடும். அதே நேரம் நம்மை நம்பி நம்மோடு வருபவர் களை காப்பாற்ற வேண்டும். என்ன செய்ய என்று குழம்பினார்.



ஆயினும் கலங்காமல் முருகன் மீது பாரத்தை போட்டுவிட்டு களக்காடு அருகே உள்ள ஏர்வாடிக்கு வந்தார்.

அங்கு சின்னதம்பி மரக்காயர் என்ற மந்திரவாதி ஒருவரை சந்தித்தார். அவரிடம் முருகப் பெருமானுக்கு கொடிமரம் வெட்ட வந்த கதையை கூறி உதவிக்கு கூப்பிட்டனர்.

சின்னதம்பி மரக்காயரின் மனைவி பாத்திமாபீவி அவரை தடுத்தார்.

"நான் நேற்று முன்தினம் இரவு பயங்கர கனவு கண்டேன். அதில் உமது உயிருக்கு ஆபத்து உள்ளதாக அறிகுறி காட்டுகிறது, எனவே கொடிமரம் வெட்ட நீங்கள் செல்ல வேண்டாம்" என்று கூறினாள்.

ஆனால் சின்னதம்பி மரக்காயர் கேட்கவில்லை.

விதி யாரை விட்டது.

அவர் ஆறுமுகம் ஆசாரி குழுவினருடன் களக்காட்டு மலைக்கு சென்றார்.

அவர்கள் திருச்செந்தூரில் இருந்தே 21 மாட்டு வண்டிகளில் வந்து இருந் தார்கள். அந்த வண்டிகள் அணிவகுத்து களக்காடு மலையை நோக்கி சென்றது.

ஆனால் அவர்களுக்கு தேவையான கொடிமரம் கிடைக்கவில்லை.

அலைந்து திரிந்து பார்த்தார்கள் பக்கத்தில் எந்த இடத்திலும் சரியான மரம் கிடைக்கவில்லை. எனவே காக்காச்சி மலை என்று அழைக்கப்படும் மேற்குத் தொடர்ச்சி மலையான பொதிகை மலை உச்சிக்கு சென்றனர்.

அங்கு அற்புதமான நல்ல உயரமான சந்தனமரம் ஒன்று இருந்தது.

"ஆகா இந்த மரம் தான் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு ஏற்ற கொடிமரம்" என்றார், ஆறுமுக ஆசாரி.

அவர், சின்னதம்பி மரக்காயரிடம் இம்மரத்தை பற்றி கேட்கிறார். ரம்மியமான வாசனையுடன் இருக்கும் அந்த அற்புத மரத்தை குறித்து மை போட்டு பார்க்கிறார் மாந்திரிகரான சின்ன தம்பி மரக்காயர்.

அப்போது அந்த மரத்தில் அடி மரத்தில் சுடலைமாடனும், மேல் முனையில் சங்கடகாரனும் உள்பட 21 தேவதைகள் இருந் தது தெரிய வந்தது.

அந்த 21 தேவதைகளையும் விரட்டி விட்டு தான் மரத்தினை வெட்ட வேண்டும் என்பதால் அதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தனர்.

முதலில் மந்திரம் மூலம் தேவதைகளை விரட்ட மை போட்டார் மரக்காயர்.

மற்றவர்களை கோடாரி கொண்டு வெட்டச் சொன்னார். கோடாரி மூலம் வெட்டப்பட்ட மரம் கோடாரியை திருப்பி விட்டது.

உடனே அந்த கோடாரி மரத்தை வெட்டிய 20 பேர்களின் கழுத்தில் பட்டது.

அலறியபடி 20 பேரும் ரத்த வெள்ளத்தில் சரிந்தனர். அதை தொடர்ந்து அவர்கள் மரணம் அடைந்தனர்.

இதனால் ஆறுமுக ஆசாரி அதிர்ச்சி அடைந்தார்.

ஐயோ நான் என்ன செய்வேன்? என்று மந்திரவாதி சின்னதம்பி மரக்காயரிடம்





சென்றபோது அவரும் ரத்தம் கக்கி இறந்து இருந்தார்.

அடுத்த வினாடி ஆறுமுக ஆசாரிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை..

இதற்கிடையில் அந்த மரத்தில் இருந்த 21 மாட தேவதைகளும் மரத்தை விட்டு கீழே இறங்கி ஆறுமுக ஆசாரியை விரட்டியது.

உயிருக்கு பயந்த அவர் காக்காச்சி மலையை விட்டு ஓடினார். அடுத்து பொதிகை மலைக்கு வந்தார். அந்த இடத்தை விட்டு கீழே இறங்கி ஓட ஆரம்பித்தார். இறுதியில் தாமிரபரணி ஆற்றங்கரையில் சொரிமுத்து அய்யனார் கோவிலில் வந்து அய்யனார் காலை பற்றிக் கொண்டு காப்பாற்ற கூறி கத்தினார்.

சொரிமுத்து அய்யனார் 21 மாடதேவதை களையும் அழைத்து சமாதானம் செய்தார்.

'முருகன் எனது சகோதரன்தான்.. அவன் கோவிலுக்குதானே கொடிமரம் செல்கிறது. பிறகு ஏன் தடுக்கிறீர்கள்' என்று கூறினார்.

அதற்கு சுடலைமாடன், சங்கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளும் நாங்கள் வசிப்பதற்கு இது போன்ற வேறு சந்தன கொடிமரம் இல்லை என்றும், திருச்செந்தூர் ஆலயத்தில் இந்த கொடிமரம் பிரதிஷ்டை செய்யபட்ட பின்பு, எங்களை தொடந்து இந்த கொடி மரத்திலேயே வாசம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்றும், எங்களுக்கு முதல் பூஜை நடத்திய பின்பே மூலவருக்கு பூஜைகள் நடத்த வேண்டும்" என்று சொரி முத்தையனாரிடம் வேண்டினர்.

சொரி முத்தையனாரும் அவர்களது வேண்டு கோளை ஏற்றுக்கொண்டு சுடலைமாடன், சங் கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளும் அந்த சந்தன மரத்தை அவர்களே வெட்டி அதை திருச்செந்தூரில் கொண்டு சேர்த்து ஆலயத் தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் அவர்களை அந்த கொடிமரத்திலேயே தொடந்து வாசம் செய்து கொள்ளும்படியும் உத்தரவிட்டார்.

அதன்படி சுடலைமாடன், சங்கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளும் அந்த சந்தன மரத்தை வெட்டினார்கள். பின் 21 மாட்டு வண்டியையும் ஒன்றாக கட்டினர். அந்த சந்தன மரத்தை அப்படியே தூக்கி வைத்து திருச்செந்தூர் நோக்கி கொண்டு சென்றார்கள்.

அம்மரமே தற்போது திருச்செந்தூரில் கொடி மரமாக வைக்கப்பட்டுள்ளது.

சொரி முத்தையனார் உத்திரவின்படி சுடலைமாடன், சங்கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளும் இந்த கொடிமரத்தில. வாசம் செய்து வருகின்றனர்.

இப்போதும் திருச்செந்தூர் ஆலய்த்தில் மாசி திருவிழா நடைபெறும் போது ஆடு வெட்டி சுடலை மாடனுக்கும், சங்கடகரகாரனுக்கும் படைத்து விட்டுத்தான் தேர் ஓட வேண்டிய வேலைகளை செய்வார்கள்.

மாசி திருவிழா தேர் ஓடும் போது அதிலேயும் சங்கடகரகாரன் தேர் மேல் ஏறி "சரி போகலாம்" என்று கூறியவுடனேதான் தேர் நகரும்.

மேற்கண்ட தகவலை "கொடி மரக்காவியம்" என்றும் வில்லுப்பாட்டு கதையில் கூறப்பட்டுள்ளது.

சொரிமுத்து அய்யனாரின் ஆசியுடன் சுடலைமாடன், சங்கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளும் இன்றளவும் வாசம் செய்து வரும் பொதிகை மலையில் இருந்து கொண்டு வரப்பட்ட சந்தனமரமே தற்போது திருச் செந்தூரில் கொடிமரமாக இருப்பதால் இந்த கொடி மரத்திற்கு முதலில் பூஜைகள் நடைபெற்ற பின்னரே மூலவருக்கான நடை திறக்கபட்டு நிர்மால்யம், அபிஷேகம் மற்ற பூஜை எல்லாம் நடைபெற்று வருகிறது.

தினமும் காலை ஐந்து மணிக்கு கொடி மரத்துக்கு பூஜைகள் நடைபெறும்போது, இரண்டு பேர் மந்திரத்தை பகிர்ந்து சொல்ல அவர்களுடன் சேர்ந்து மற்றவர்கள் ஒவ்வொரு மந்திரத்தின் முடிவிலும் நமஸ்காரம் செய்வார்கள்.

அதிகாலையில் நடைபெறும் இந்த கொடிமர பூஜையில் கலந்து கொண்டால் சுடலைமாடன், சங்கடகாரன் உள்பட 21 மாட தேவதைகளின் ஆசிகள் கிடைக்கப்பெற்று வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும்.



# மகப்பேறு தரும் கதலி நரசிங்கர் கோவில்



தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ள ஜம்புலிபுத்தூரில் அமைந்திருக்கிறது இந்த கதலி நரசிங்கர் (நரசிம்மர்) ஆலயம்.

முன்பு ஒரு காலத்தில், செண்பக மரங்கள் நிறைந்த பகுதியாக இந்த ஊர் இருந்ததால் ஜம் புலிபுத்தூருக்கு, 'செண்பக வனம்' என்றும் பெயர் உண்டு பாம்பு புற்றினுள் வாழைப்பூ வடிவில் கல் விக்கிரகமாக எம்பெருமான் சுயம்புவாக தரிசனம் கொடுத்து அவதரித்ததால், 'கதலி நரசிங்கர்' (கதலி என்றால் வாழை!) என்ற பெயரில் அந்தத் தெய்வத்தை வழிபட ஆரம் பித்தனர். அழகிய தெப்பக்குளத்துடன் அழகாக அமைந்திருக்கிறது ஆலயம்.

ஸ்தல விருட்சம் நாவல் மரம். முகப்பில் பந்தக்கால் மண்டபம். சிற்பங்களுடன் கூடிய சிறிய கோபுரத்துடன் திகழ்கிறது. உள்ளே நுழைந்ததும் ஸ்தம்பம் மற்றும் பலி பீடம் அமைக் கப்பட்டுள்ளது. இவற்றைக் கடந்து சென்றால் சிற்ப தூண்களுடன் திகழும் மகா மண்டபம். இங்கு கதலி நரசிங்க பெருமாளை நோக்கி மேற்கு பார்த்த சிறியதும் பெரியதுமாக சிறிய சன்னதியில் இரண்டு கருடாழ்வார்களின் விக் கிரகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எப்போதும் ஒரு கருடாழ்வார் விக்கிரகம் மட்டுமே அமைக் கப்பட்டிருக்கும்.

இத்திருத்தலத்தில் மட்டும் இரு கருடாழ்வார்கள் உள்ளனர். இவர்களை வணங்கி இடப்புறம் திரும்பினால் நின்ற திருக்கோலத்தில் காலபைரவர். விசேஷ நாட்களில் இவருக்கு வடை மாலை சார்த்தி வழிபடுகிறார்கள். பைரவர் வரம் தருவதில் மிகவும் வல்லவர் என்கிறார்கள். அதன் அருகில் தெற்கு






நோக்கிய சந்நிதியில், இருகரம் கூப்பியபடி காட்சி தருகிறார் ஆஞ்சநேயர். இவரை மனமார பிரார்த்தித்துச் சென்றால் மகப்பேறு வாய்க்கும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

அப்படி, தங்களது வேண்டுதல் பலித்தவர்கள் இவருக்கு வடைமாலை சார்த்தி வழிபட்டுச் செல்கின்றனர். அடுத்து, பெரிய முன்மண்டபம் தாண்டினால் முத்து மண்டபம். இதன் வடக்கு மூலையில், தெற்கு நோக்கி காட்சி தருகிறார் சேனை முதல்வர். உற்சவ காலங்களில் இவருக்கே முதல் மரியாதை. கருவறையில் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக வரதராஜர், நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். பின்னிரு கரங்களில் சங்கு, சக்கரம். முன் வலக்கரம் அபய ஹஸ்தம் காட்ட,முன் இடக்கரத்தை தொடை மீது வைத்து, நின்ற திருக்கோலத்தில் அருள்புரிகிறார்.

இவரது திருவடி அருகில், சிறிய சிலை வடிவில் சுயம்புவாக தோன்றிய வாழைப்பூ போன்ற வடிவில் காட்சி தருகிறார் கதலிநரசிங்க பெருமாள்.

அபிஷேக, நைவேத்திய, தீபாராதனை வேளைகளில் மட்டுமே இவரை தரிசிக்க இயலும். மேலும் ஸ்ரீதேவி, பூதேவி சமேத கதலிநரசிங்கப் பெருமாள், சக்கரத் தாழ்வார் உள்ளிட்ட உற்சவ மூர்த்திகள் இந்த சந்நிதியில் உள்ளனர். பெருமாளின் சந்நிதி யை ஒட்டி வலப்புறத்தில் லட்சுமி நரசிம்மர் தனிசந்நிதி. இதையடுத்து கிழக்கு நோக்கிய தனிச் சந்நிதியில் செங்க மலத் தாயார் அருள்பாலிக்கிறார்.

நான்கு திருக்கரங்களுடன் கருணை பொங்கக் காட்சியளிக்கிறார். தாயாரின் சந் நிதிக்கு எதிரே நான்கு தூண்களுடன் திகழும் மண்டபத்துக்கு திருமண் காப்பு மண்டபம் என்று பெயர். திருவிழாவின்போது உற்சவம் முடிந்து ஆலயம் திரும்பியதும் இந்த மண்டபத்தில் எழுந்தருளி இளைப்பாறுவார் கதலி நரசிங் கப் பெருமாள். அப்போது, வெண்சாமர உபசாரத் துடன் இவருக்கு தீபாராதனை காட்டி, அதையே தாயாருக்கும் காட்டுவார்கள். இது, இந்த ஆலயத்தின் விசேஷமாகக் கருதப் படுகிறது.


ராஜாமணி

இந்தக் கோயிலில் தினமும் இரண்டு கால பூஜைகள் நடைபெறு கின்றன. காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 7.15 மணி வரையும் நடை திறந்திருக்கும். சனிகிழமை மட்டும் மதியம் 1 மணி வரையும் இரவு 8 மணிவரையும் திறந்திருக்கும்.

தொகுப்பு: ராஜாமணி,
சென்னை

தொடர்பு எண்: 9445642658

# நட்சத்திர குறியீடுகள்

## வெற்றி தருமா?

ஜோதிட சாஸ்திரத்தில் இருபத்தியேழு நட்சத்திரங்களுக்கும் உருவம் அல்லது குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை களை நாம் வெற்றி சின்னங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். எப்படி யென்றால், நாம் வசிக்கும் வீடு, பணிபுரியும் இடம், அணியும் ஆடை, அறிமுக முகவரி அட்டை (visiting card), கடித முகவரி ஏடு (Letter pad) இவைகளில் அவரவர் ஜென்ம நட்சத்திரத் திற்குரிய உருவத்தை சின்னங்களாக பயன் படுத்திவந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம். இதற்கு புராண இதிஹாசங்களில் ஆதாரம் இருப்பதை ஒருசிலர் ஆதாரமாக கூறியுள்ளனர்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஜென்ம நட் சத்திரம் ரோஹிணியாகும். ரோஹிணி நட்சத்திரத்தின் உருவம் தேராகும். ஸ்ரீகிருஷ்ணர் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களுக்கு மஹாபாரதப்போரில் வெற்றி தேடித்தந்தார்.

பகவான் ஸ்ரீராமரின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசமாகும். புனர்பூசம் நட்சத்திரத்தின் உருவம் வில்லாகும். ஸ்ரீராமர் வில்லேந்தி ராவணனை வெற்றி கொண் டார்.

பகவான் ஸ்ரீவாமனரின் ஜென்ம நட்சத்திரம் திருவோ ணமாகும். திருவோணம் நட்சத்திரத்தின் உருவம் மூன்று பாதச்சுவடுகள் என கூறப்படுகிறது. ஸ்ரீவாமனர் ஈரேழு உலகையும் ஈரடியாய் அளந்து மூன்றாவது அடியை மஹாபலி சக்கரவர்த்தியின் தலையில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார்.எனவே ஸ்ரீவாமனருக்கு உலகளந்த பெருமாள் என்னும் நாமம் உண்டு.

ஸ்ரீஅனுமனின் ஜென்ம நட்சத்திரம் மூலமாகும். மூலம் நட்சத்திரத்தின் உரு வம் சிங்கத்தின் வால் என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.அனுமன் கையிலிருக்கும் ஆயுதம் சிங்கத்தின் வால் போன்ற வடிவத்தில்தான் இருக்கும்.

ஸ்ரீருத்திரனின் ஜென்ம நட்சத்திரம் திருவாதிரையாகும். திருவாதிரை நட்சத் திரத்தின் உருவம் மண்டையோடு என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீருத்திரன் மண்டையோடுகளை மாலை யாக அணிந்திருப்பவன்.

மேற்கண்ட புராண, இதிஹாச தகவல் களின் மூலமாக நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் நட்சத்திர உருவங்கள் அல்லது சின்னங்கள் நமக்கு வெற்றிதரும் சின்னங்களாகும். அவர வர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை, தன் னோடு வைத்திருந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம்.



## ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

**இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.**

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்



# நட்சத்திரங்களும் அதற்குரிய தெய்வங்களும்

அஸ்வினி..........ஸ்ரீ சரஸ்வதி தேவி

பரணி ................ஸ்ரீ துர்கா தேவி (அஸ்ட புஜம்)

கார்த்திகை.........ஸ்ரீ சரஹணபவன்
(முருகப் பெருமான்)

ரோகிணி............ஸ்ரீ கிருஷ்ணன்.
(விஷ்ணு பெருமான்)

மிருகசீரிடம்........ஸ்ரீ சந்திர சூடேஸ்வர்
(சிவ பெருமான்)

திருவாதிரை.......ஸ்ரீ சிவபெருமான்

புனர்பூசம்...........ஸ்ரீ ராமர் (விஸ்ணு பெருமான்)

பூசம் ...................ஸ்ரீ தட்சிணாமூர்த்தி
(சிவபெருமான்)

ஆயில்யம்..........ஸ்ரீ ஆதிசேசன் (நாகம்மாள்)

மகம் ...................ஸ்ரீ சூரிய பகவான்
(சூரிய நாராயணர்)

பூரம்....................ஸ்ரீ ஆண்டாள் தேவி

உத்திரம் .............ஸ்ரீ மகாலக்மி தேவி

ஹஸ்தம் .............ஸ்ரீ காயத்திரி தேவி

சித்திரை.............ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

சுவாதி ...............ஸ்ரீ நரசிம்மமூர்த்தி

விசாகம்.............ஸ்ரீ முருகப் பெருமான்

அனுசம் .............ஸ்ரீ லக்ஷ்மி நாரயணர்

கேட்டை ............ஸ்ரீ வராஹ பெருமாள்
(ஹயக்கிரீவர்)

மூலம் ................ஸ்ரீ ஆஞ்சனேயர்

பூராடம் ..............ஸ்ரீ ஜம்புகேஸ்வரர்
(சிவபெருமான்)

உத்திராடம்.........ஸ்ரீ வினாயகப் பெருமான்

திருவோணம் .....ஸ்ரீ ஹயக்கிரீவர்
(விஷ்ணுப் பெருமான்)

அவிட்டம் ...........ஸ்ரீ அனந்த சயனப் பெருமாள்
(விஷ்ணுப் பெருமான்)

சதயம்................ஸ்ரீ மிருத்யுஞ்ஜேஸ்வரர்
(சிவபெருமான்)

பூரட்டாதி...........ஸ்ரீ ஏகபாதர் (சிவபெருமான்)

உத்திரட்டாதி .....ஸ்ரீ மகா ஈஸ்வரர்
(சிவபெருமான்)

ரேவதி ...............ஸ்ரீ அரங்கநாதன்

# பக்தி ஞானம், கிரியைக்கு முக்கியத்துவம் தரும் வீரசைவம்

**கடவுள் உருவாக்கிய மதம்**

வீரசைவன் பிறந்து சில மணி நேரங்களிலேயே அவன் கழுத்தில் சிவலிங்கம் அணிவிக்கப்படுகிறது. அது அவன் சாவு வரையிலும் கூடவே வரும். சிவலிங்கத்தை சுமந்து செல்லும் அவன் ஜாதிவேறுபாடு ஏற்றதாழ்வு காணுதல் தீண்டாமை, தேவையற்ற சடங்குகள் போன்றவற்றை எப்போதுமே சிந்திக்க கூடாது. காரணம் சகல உயிர்களும் சிவனின் அம்சம் இருப்பதினால் அதை பேதப்படுத்தி காணுவது மகாபாவமாகும். எல்லா உயிரையும் ஒன்று என கருதி சிவனோடு ஐக்கியமாவதற்கு மனிதனை உந்தி தள்ளுவதே லிங்க ஒழுக்கமாகும்.

வீர சைவன் பிறர் உழைப்பில் எப்போதுமே வாழ கூடாது. இது உயர்ந்த தொழில் அது தாழ்ந்த தொழில் என வேலையில் பாகுபாடு காணகூடாது. தன் உழைப்பில் கிடைக்கும் வருவாயில் தானும் வாழ்ந்து, சமுதாயத்திற்கும் கொடுக்க வேண்டும். என்னிடம் தான் ஏராளமான சொத்து சுகம் இருக்கிறதே செல்வம் கொட்டி கிடக்கிறதே நான் எதற்கு உழைக்க வேண்டும் என்று உட்கார்ந்து சாப்பிடுபவன் உணவை அல்ல பாவத்தையே சாப்பிடுகிறான். இல்லற வாழ்கை வேண்டாம் என்று துறவறத்தை மேற்கொண்டவனும் கூட உழைக்காமல் உண்ணகூடாது. இது வீர சைவம் இரண்டாவது வலியுறுத்தும் சதா சாரம் என்ற தன்னிலை ஒழுக்கமாகும்.

முன்றாவதாக உள்ள சிவ ஒழுக்கம் சிவ நெறி ஒன்று மட்டும் தான் உயிர்களுக்கு வரும் துன்பத்தை துடைக்க வல்லது. சிவநெறியில் நிற்பவன் தான் நாடும் ஊரும் நலம் பெற தனது இன்னுயிரை தியாகம் செய்ய துணிவான். பிற உயிர்களை துன்பம் தொடராமல் பாதுகாப்பதே இறைவனுக்கு செய்யும் தொண்டாகும். சின்னசிறிய புழுதானே அது அதை நசுக்கினால் அப்படியென்ன பாவம் வந்துவிடப் போகிறது என நசுக்க துணிந்தால் நீ நசுக்குவது புழுவை அல்ல சிவனை என்பதை






www.aanmeegamalar.com

உணர்ந்து கொள். இவ்வொழுக்கம் எல்லா மனிதருக்கும் கட்டாயம் தேவை யென வீரசைவம் வலியுறுத்துகிறது அந்த சமயத்தில் ஆழமாக புதைந்து கிடக்கும் சமுதாய நோக்கை நமக்கு படம் பிடித்து காட்டுகிறது.

நான்காவது ஒழுக்கமான பணி ஒழுக்கம் என்பது ஒரு மனிதனின் ஆணவத்தை ஒழித்து கட்டுவதை பற்றி பேசுகிறது. நான் உயர்ந்தவன் என்று ஒருவன் நினைத்து கொண்டால் அது தவறல்ல நான் மட்டுமே உயர்ந்தவன் என்று நினைப்பது தவறு மட்டுமல்ல பாவமும் ஆகும். அதே போல என் அண்டைய வீட்டுகாரன் தீயவனாக இருந்தால் எனக்கென்ன என்று போவதும் ஒரு வித ஆணவமாகும் அவன் அடித்தாலும், அவமானபடுத்தினாலும் அவனிடம் உள்ள தீமையை அகற்ற பாடுபடுவது எனது கடமையாகும் என்று செயல்படுவது நமது ஆணவத்தை அறுக்கும் வழியாகும். மற்ற ஜீவன்களுக்கு பணியாற்றுவதற்காகவே நான் பிறந்து இருக்கிறேன் என நம்பி செயல்படுவதே வீர சைவனின் லட்சணம்

ஐந்தாவது ஒழுக்கமான கணாசாரம் என்ற சமூக ஒழுக்கம் சமூகத்தின் கூட்டுதன்மையை பரஸ்பரம் விட்டு கொடுத்தலை, பொதுநோக்கை வலியுறுத்துகிறது. நல்லோரை பாதுகாப்பதும், தீயோரை அறவழியில் திருப்புவதும் மிக முக்கியமான காரியமாகும் இந்த காரியம் கை கூடி வர தனி மனித எத்தனிப்பு கூடவே சமூக எத்தனிப்பும் இருந்தால் மிக விரைவில் ஒட்டுமொத்த உலகத்தில் சிவநெறி மட்டுமே தழைத்து ஓங்கி நிற்கும் இதற்காக ஒவ்வொரு வீர சைவனும் உழைத்து கொண்டு இருக்க வேண்டுமென இந்து ஐந்தாவது ஒழுக்கம் வலியுறுத்துகிறது. இது தவிர குரு, லிங்கம், சங்கமம் திருவடி துலக்கல், திருவமுது, திருநீறு, ருத்ராட்சம் மந்திரம் என எட்டுவகையான காப்பு முறைகளும் வீர சைவத்தின் சொல்லப்படுகிறது.

வீர சைவத்தில் ஐந்துவித ஒழுக்கம் எட்டுவித பாதுகாப்பு இருப்பது போல ஆறுவகைபயிற்சி இருக்கிறது. இந்த ஆறுவகை பயிற்சிகளை சடுதளம் என்ற பரிபாஷையில் வீரசைவ ஞானிகள் அழைக்கிறார்கள் பொதுவாக இவர்கள் சிவலிங்கத்தை கழுத்தில் அணிந்து இருந்தாலும் அதற்கென்று உரிய தனிப்பெட்டியில்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

வைத்திருந்தாலும் தினசரி வழிபாடு செய்ய வேண்டும். இவர்கள் வைத்திருக்கு சிவலிங்கத்திற்கு இஷ்டலிங்கம் என்று பெயர்.

இந்த லிங்கத்தை அணிந்தவர் சிறந்த ஒழுக்கசீலராக இருக்க வேண்டும். ஒழுக்கம் என்பது திடிரென ஒரு மனிதரிடம் உருவாவதில்லை. தொடர்ச்சியான பயிற்சியே ஒருவனை ஒழுக்கமுடையவனாக மாற்றும். அப்படி மாற்றத்திற்கு அழைத்து செல்வது தான் சடுதளம் என்ற பயிற்சிகளாகும் தினசரி லிங்க பூஜை செய்வதினால் அன்றாட வாழ்க்கை தூய்மையாகிறது. நான் அப்பழக்கற்ற வாழ்கை வாழ்பவன் என்ற எண்ணமே ஒருவனுக்கு கம்பீரத்தை கொடுக்கும். அந்த கம்பீரம் பக்தி என்ற உயிர்உணர்வை பெருக்கும்.

கரடு முரடான பாறை மீது பலகாலம் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடினால் முரட்டு தன்மை மாறி மென்மையாகி விடுவது போல



பக்தியானது ஒரு மனிதனை உயர்ந்த நிலைக்கு அழைத்து செல்லும்.

இறைவன் மீது செலுத்தும் அன்பாகவும் இது அமையும். அவனை தவிர தனக்கு வேறு எந்த பற்றுதலும் கிடையாது என்ற பயிற்சியின் பெயரே மகேஸ்வரதலமாகும்.

எண்ணங்களை அடக்கி தனக்குள் பயணத்தை பக்தி பூர்வமாக நடத்தி கொண்டிருக்கும் மனிதன் தனக்கு வெளியே உள்ள அல்லது வெளியில் இருந்து தன்னை தாக்கவல்ல அசுத்தம் எதுவென சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளகிறான். இதனால் தன்னை முழுமையாக ஈஸ்வரனுக்கு அர்ப்பணித்து கொள்வதனால் தன்னை சுற்றியுள்ள பகுதிகளை தான் அறியாமலேயே சுத்தப்படுத்தி கொள்கிறான். இந்த பயிற்சிக்கு பிரசாதித்தல் நிலை என்று பெயர்.

பக்தியில் கணிந்து கடவுளுக்கு தன்னை முழுமையான அர்ப்பணித்து கொள்ளும் பக்தன் அடுத்து அடையும் நிலை தானும் கடவுளும் வேறல்ல இரண்டும் ஒன்றுதான் என்பதாகும். இதற்கு பிராண லிங்கத்தலம் என்று பெயர். இறைவனுடன் கலந்த நிலையில் ஆனந்தத்தில் முழ்கும் பயிற்சிக்கு சரண தலம் என்று பெயர். சிவலிங்கத்தின் பண்புகளை எல்லாம் உள்வாங்கி ஐக்கியத்தலம் என்பதை அடைகிறான் ஐக்கியதலம் பயிற்சியால் முக்தியை நோக்கி கனியும் போது ஆறு பயிற்சி முறைகளும் நிறைவடைந்து சமரச பக்தியை சாதகன் வெல்லுகிறான் என வீரசைவம் வலியுறுத்துகிறது.

இந்த பயிற்சி முறைகளை ஊன்றி கவனிக்கும் போது வீர சைவத்தின் தனிதன்மையை நம்மால் உணராமல் இருக்க முடிவதில்லை. பக்தி ஞானம், கிரியை ஆகிய மூன்றுக்கும் வீரசைவம் முதலிடம் கொடுக்கிறது. இந்த மூன்றும் சமமான வேகத்தில் வளர்ந்தால் தான் இறைவனோடு இரண்டற கலக்கும் நிலை வந்தமையும் பக்தி, ஞானம், கிரியை ஆகிய மூன்றையும் பெற வீரசைவம் சொல்லும் நடைமுறைகளை பின்பற்றினாலே போதும். காட்டுக்கு சென்று கடுந்தவம் ஏற்று முக்திக்காக பாடுபடவேண்டியதில்லை.என லிங்காயத்துக்கள் சொல்கின்றர்.

சகல துறையிலும் ஒழுக்கத்தை மட்டுமே பின் பற்ற வேண்டுமென வற்புறுத்தப்படும் போது அது உண்மையாக கடைபிடிக்கப்படும் போது அங்கு இறைவனின் தனிபெரும் கருணை தானாகவே வந்தமையும்.

வீரசைவம் என்பது கர்நாடக மாநிலத்தில் பெருவாரியான மக்களால் பின்பற்றப்பட்டாலும் நமது தமிழகத்தில் கும்பகோணம், காஞ்சிபும், மதுரை, திருப்பறக்குன்றம், சேலம், திருச்சி, தஞ்சை, கோவை, சென்னை, புதுச்சேரி ஆகிய இடங்களில் பல திருமடங்கள் நிறுவப்பட்டு வீர சைவ நெறி கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இருந்து பரப்பப்பட்டு வருகிறது.

புதுச்சேரியை அடுத்துள்ள பொம்மபுரம் திருமடமும், திருக்கோவிலூர் கீழையூரிலுள்ள ஞானியார் திருமடமும் வீரசைவ நெறியை பரப்பும் கேந்திரங்களே ஆகும். துறைமங்கல சிவபிரகாசர், சிதம்பர சுவாமிகள் குமாரதேவர், சாந்தலிங்க அடிகளார் ஆகிய தமிழ் பெரியார்களும் இந்த மரபில் வந்த ஞானிகளாவார்.

வீர சைவ மரபில் ஜங்கமம் என்ற கோட்பாடு மிகவும் புகழ்வாய்ந்ததாகும். இதற்கு நேரிடையான பொருள் அசைவது என்பதாகும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

இதனாலேயே இந்த நெறிவழியில் துறவு வாழ்வை மேற்கொள்ளவற்கு ஞானியர் ஜங்கமர் என்ற பட்ட பெயர் மரபு வாழியாக வழங்கப்படுகிறது. மேலும் இவர்களை ஜீவன் முக்தர்கள் என்று அழைப்பது மரபு.

உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் ஆத்மா தெளிவு பெற்ற ஞானிகளை ஜீவன் முக்தர்கள் என அழைப்பது வழக்கம். ஆனால் சாதாரண வீர சைவனை கூட ஜீவன் முக்தன் என்று அழைக்கிறார்கள். இதற்கு சரியான காரணமும் இருக்கிறது.

நமது மதம் கர்மவினை என்றொரு கோட்பாடை உயிர் நாடியாக கொண்டது என நமக்கு தெரியும். கர்ம வினையின் பரிணாம வளர்ச்சி தான் மறுபிறப்பு கொள்கையாகும். ஆனால், இந்து மதத்தில் ஒரு பிரிவாக இருக்கும் வீரசைவம் உயிர்களுக்கும் மறு பிறப்பு உண்டு என்பதை தர்க்கரீதியில் மறுக்கிறது.

கடவுளிடம் நெருங்காத மனிதனே பந்த பாச தளையில் கர்ம வளையத்திற்கு அகப்பட்டு பிறப்பு இறப்பு சக்ரத்தில் மாட்டி தவிக்கிறான் வீர சைவனோ பிறந்த நேரம் முதல் மரண காலம் வரையிலும் முழு முதற் கடவுளின் திருமேனியான சிவலிங்கத்தை தனது உடலில் தாங்கி வாழ்கிறான்

சிவலிங்கம் எங்கு உள்ளதோ அந்த இடம் சிவாலயமாகும். அப்படியென்றால் வீரசைவனின் உடலும் சிவாலயமாகும். ஆலயத்தை அசுத்தமும் சித்த மலமும் அணுகவே அணுகாது. சித்த மல மறுத்தவன் சிவனாகவே ஆகி விடுகிறான்.

அதாவது வீர சைவ நெறியை பின்பற்றும் ஒவ்வொருத்தனும் சிவதன்மை பெற்ற முழு மனிதனே ஆவான். சிவதன்மை என்பது பிறப்பற்ற நிலையாகும். அதனால் வீர சைவனுக்கு மறு பிறப்பு இல்லை. அவன் வாழும் போதும் வாழ்கைக்கு பின்னும் ஜீவன் முத்தனாக இருக்கிறான் என்கிறது.

இதை கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. இது நடைமுறையில் சாத்தியமா ? நிச்சயம் சாத்தியப்பட்டுவராது. கழுத்திலேயே லிங்கத்தை கட்டி கொள்வதால் மட்டும் ஒருவன் புனிதனாக ஆகி விட முடியாது. இது எப்படி இருக்கிறது என்றால் தினசரி மூன்று வேளை குளித்தால் பக்தி கனிந்துவிடும் என்று சொல்வது போலி ருக்கிறது. நீரில் நனைவதினாலேயே பக்தியும் முக்தியும் பெற்றுவிடலாம் என்றால் தவளையும் மீனும் தான் அந்த விஷயத்தில் மனிதனை வெற்றி கொள்ளும்.


ஆன்மிகமலர்

ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ

aanmeegamalar

YouTube

யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து

பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை

Subscribe

like & share


ஆகவே கருவறையிலேயே சதாசர்வகாலமும் வாழுகின்ற அர்ச்சகரின் மனதில் காம குரோதங்கள் ஆட்சி செய்தால் அவன் பூஜை புரிந்தான் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக பிறப்பற்ற நிலையை அடைந்து விட முடியுமா ? எனவே இந்த ஒரு விஷயத்தில் மட்டும் வீர சைவ கோட்பாட்டோடு நாம் முரண்பட வேண்டிய நிலையில் உள்ளோம். இருப்பினும் ஜாதிமறுப்பு, உழைப்புக்கு முன்னுரிமை தரும் வீரசைவர்களை எத்தனை பாராட்டினாலும் அது குறையுடையதாகவே இருக்கும். .


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும் போன்: 09442426434

# குலதெய்வம் தெரியாதவர்களுக்கு வரபிரசாதமாக விளங்கும்

# ஸ்ரீசக்கரம்

இந்து சமயத்தில் வழிபாட்டு முறைகள் பல இருந்தாலும் யந்திர பூஜை மிகவும் சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியாக யந்திர வழிபாடும் உண்டு. இதன்படி பார்த் தால், கணபதி யந்திரம், முருகன் யந்திரம் போன்று யந்திர பூஜையின் பட்டியல் நீண் டுக் கொண்டே போகும் ஆனால் இந்த யந்திரங் களுக்கெல்லாம் தலை யாயது ஸ்ரீ சக்ர யந்திரம், எனவே இதனை யந்திர ராஜம் என்றும் கூறுவார்கள்.

அதுபோல நமது சமய வழிபாடு களில் அனைத்து மந்திரங்களுக்கும் ஸ்ரீ வித்யா மந்திரமே தலையாயது என்பதால் மந்திர ராஜம் எனும் இவ்வழிபாடு சிறப்பு பெறுகிறது.

சிதம்பரம் பொன்னம் பலத்தில் வீற்றிருக்கும் நடராஜர 14 தடவை தனது டமருகத்தை அடித்து ஒலி எழுப்பினார் . முதலில் ஒன்பது தடவையும் பின்னர் ஐந்து தடவையும் மங்கள ஒலி எழுப்பினார்.

ஒன்பது என்பது தேவிக்குரிய நவாக்ஷாரி

ஐந்து என்பது சிவனுக் குரிய பஞ்சாட்சரம்

மேலும் தனது இடப் பாகத்தில் வீற்றிருக்கும் அன்னைக்குரிய இடது காலால் நடராஜர் அருள் பாலிக்கிறார்.

சக்திக்குரிய நவாக்ஷரி மந்திரத்தை முன்னிலைப்படுத்திய நடராஜர், அருள் பாலிப்பது சக்தியின் மூலமே என்பதைப் போல இடது காலை தூக்கி ஆனந்த நடனமாடி அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீ சக்கர மஹாமேரு என்பது சிவசக்தியின் ஒன்பது கட்டு அரண்மனை. ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரி யின் மஹாசாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில்



கணபதி, முருகன் முதல் காளி, பைரவர் வரை அனைத்து தெய்வங்களுக்கும் இடம் உண்டு.

ஸ்ரீ சக்கரத்தை வழிபடும் போது அனைத்து தெய்வங்களையும் ஒரே இடத்தில் வழிபாடு செய்யமுடியும். ஸ்ரீ சக்கரத்தில் வீற்றிருக்கும் தேவி ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் பெருமை பேசும் நுல்கள் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் , சௌந்தர்யலஹரி, தேவி மகாத்மியம், நவரத்தினமாலை, அபிராமி அந்தாதி போன்றவை.

சௌந்தர்யலஹரியின் இரண்டாவது பாடலில் ஆதி சங்கரர் பேசும் போது ஸ்ரீ சக்தியின் திருப்பாதங்களில் இருந்து விழுகின்ற மண் துகள் களை வைத்து பிரம்மா பூலோஹம், புவர்லோஹம், ஸுவர்லோஹம், மஹர்லோஹம், ஜனலோஹம், தபலோஹம், ஸத்யலோஹம் எனும் மேல்லோகங்கள் ஏழையும், அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மகாதல, பாதாளம் எனும் கீழ்லோகங்கள் ஏழையும் ஸ்ருஷ்டித்தார் என்கிறார்.

ஸ்ரீ மகாதேவியின் பாததூளியால் ஆதிசேஷன் உருவெடுத்து பிரம்மா படைத்த பதினான்கு உலகையும் தன் சிரசினால் தாங்கிகொண்டு இருக்கிறார்.

ஸ்ரீ ருத்திரனோ தேவியின் பாததூளியை கையிலெடுத்து "த்ரியம்பக" மந்திரத்தினால் பஸ்ம பொடியாக்கி தன் சிரசு முதல் பாதம் வரை பூசிக்கொண்டார்

பிரம்மனின் சக்தியான சரஸ்வதியும், விஷ்ணு வின் சக்தியான லக்ஷ்மியும் ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் இரு புறமும் நின்று சாமரம் வீசி பணிவிடை செய்கிறார்கள்.

தேவி சிவனை அன்பால் நோக்கியபோது வல்லபை ஸித்தி லட்சுமியுடன் ஸ்ரீகணபதி தோன்றினார். ஸ்ரீ கணபதியும், ஸ்ரீ முருகனும் ஸ்ரீ சக்கரத்தில் அன்னையிடம் பால் அருந்தும் குழந்தைகள் .

ஸ்ரீ சக்ரம் அமைந்திருக்கும் அறையின் வலப்புறம் மகாகாளியும், இடதுபுறம் மகா பைர வரும் துவார சக்திகளாக அன்னைக்கு காவல் புரிகின்றனர்.

நவகிரகங்கள், 27 நட்சத்திரங்கள், 12 இராசிகளும், அன்னையை வலம் வருகின்றனர்.

இவ்வாறாக அனைத்து தெய்வங்களுக்கும் தலைமை பொறுப்பில் வீற்றிருக்கும் மஹா சாம் ராஜ்ய தாயினி அன்னை ஸ்ரீ லலிதா மஹா திரிபுர சுந்தரி அருள்பாலிக்கும் அற்புதமானது ஸ்ரீ சக்ர மஹாமேரு. ஸ்ரீ மஹாமேருவை தரிசனம் செய்தால் அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் நமக்கு கிடைக்கும்.

குலதெய்வம் தெரியாதவர்களுக்கு ஸ்ரீ சக்ர வழிபாடு ஒரு வரப்பிரசாதம். ஸ்ரீ சக்ரத்தை வழிபட்டால் குலதெய்வம் நிறைவடையும், ப்ரசன்னமாகும். ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான யந்திரமோ, ஸ்ரீ வித்யைக்கு மேலான மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகைக்கு மேலான தேவதைகளோ இல்லை என்பது தனி சிறப்பு.



# ஆன்மீக பரவத்தின் உண்மையான நிலை

ஸெல்ஃப் – ரியலைசேஷன் ஃபெலோஷிப் சர்வதேச தலைமையகம், லாஸ் ஏஞ்ஜலீஸ், கலிஃபோர்னியா, டிசம்பர் 16, 1934ல் ஆற்றிய சொற்பொழிவு.

ஆன்மீகப்பரவத்தின் உண்மையான நிலை.

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "இறைவன் நமக்குள் உள்ள அவனது இருப்பின் தூய ஆனந்தத்தை அறிந்துணர்வதற்கான ஆன்மீக ஊக்க சக்தியை நமக்குத் தந்துள்ளான். ஆனால், படைப்பிலுள்ள தீயசக்தி, போலியான நகல்களைக் கண்டுபிடித்துள்ளது. மது மற்றும் போதை மருந்துகளின் தாற்காலிகமான கிளர்ச்சி எழச்செய்யும் விளைவுகள் உண்மையான ஆன்மீக அனுபவங்களின் போலிகளே. மது மற்றும் போதை வஸ்துக்களின் பயன்பாடானது அளவிற்கு மிஞ்சிய பாலுணர்வில் ஈடுபடுவதற்கு அடிக்கடி அழைத்துச் செல்கின்றது. இது மனதை தீவிர தேக உணர்வுடன்



பிணைப்பதன் மூலம் ஆன்மீக ஊக்க சக்தியை தடுத்துவிடுகின்றது."

"சோகமான அல்லது சந்தோஷமற்ற நினைவுகளையும் கவலைகளையும் மனதிலிருந்து அகற்றுவதற்கு அநேகர் மதுவைப் பருகுகின்றனர். ஆனால் அவ்விதமான மறதி மனிதனின் இயற்கையான ஆன்மீக அறிவை – எந்த சக்தியைக்கொண்டு மனிதன் அவனுடைய போதனைகளை வெல்லவும், நிரந்தரமான மகிழ்ச்சியைக் காணவும் வேண்டுமோ, அந்த சக்தியையே – கொள்ளையடித்து விடுகின்றது. இறைவன் பேரானந்தமாகவே உள்ளதால், அவனுடைய என்றும் புதிய ஆனந்தத்தை நம்முடைய ஆன்மாவுக்குள் நாம் தேடிக்காணவேண்டும் என விரும்புகிறான்."

மேலும் அவர் கூறுகிறார்: "போலிகள் தீமையானவை. ஏனெனில் அவை இந்தப் பிரபஞ்சத்திலுள்ள இறைவனின் எல்லா அழகான வெளிப்பாடுகளையும் அழிப்பதற்கு சதா முயன்றுகொண்டிருக்கும் ஏமாற்றும் சக்தியாகிய பிரபஞ்ச மாயையின் கவர்ச்சிகளாகும். நல்லதும் தீயதுமான இரட்டை சக்திகள், படைப்பு முழுவதிலும் ஒன்றையொன்று ஏதிர்ப்பதை நாம் காண்கிறோம். இறைவன் அன்பைப் படைத்தான்; இறைவன் காருண்யத்தைப் படைத்தான். சாத்தான் (மாயை) சுயநலத்தைப் படைத்தான்; இறைவன் சமாதானத்தைப் படைத்தான் சாத்தான் இணக்கமின்மையைப் படைத்தான்."

"இதைத் தெரிந்துகொண்டு மதுவும் போதை வஸ்துக்களும் உங்களுடைய சந்தோஷத்திற்குக் கேடு விளைவிப்பவை என்பதை நீங்கள் உணர வேண்டும்; அவை உங்களுடைய ஆன்மாவின் உண்மையான ஆனந்தத்தையும் அறிவாற்றலையும் அழித்துவிடுகின்றன. ஒருமுறை குடித்தலோ அல்லது போதை வஸ்துக்களின் ஒரு பயன்பாடுகூட (புகழ்பெற்ற மருத்துவரால் தேவை என்று மருந்து கொடுக்கப்பட்டு

124
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

அவருடைய மேற்பார்வையின்கீழ் உட்கொள்ளப்படுவதைத் தவிர) ஒரு நிரந்தரமான பழக்கத்தை ஆரம்பித்துவிட நேரலாம். ஏனெனில் இத்தகைய ஒரு மனப்போக்கு முந்திய பிறவிகளிலிருந்து உங்களுடைய ஆழ்மனதில் ஏற்கனவே பதிந்திருக்கக்கூடும். தீயவை எப்பொழுதும் தீயவை என தவிர்க்கப்பட வேண்டும்?"

ஆன்மீகப் பரவச மது ஈடு இணையற்றது.

அன்புக்குரிய குருதேவர் அருளுகிறார்: "ஆன்மீகப் பரவச மதுவை ஒருமுறை நீங்கள் ருசிபார்த்துவிட்டால் வேறெந்த ஒரு அனுபவமும் அதற்கு ஈடாகாது என்பதை நீங்கள் காண்பீர்கள். உங்கள் குழந்தைகள் மாயமான போலி இன்பங்கள் எனும் நெருப்புடன் விளையாட சபலப்படாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு தியானத்தைக் கற்பிப்பதன் மூலம் அவர்களுள் தெய்வீக உணர்வு நிலையை நிலைநாட்ட என்றும் முயலுங்கள். தெய்வீகமான ஆனந்தம் முடிவற்றது. ஆனால் மது மற்றும் போதை வஸ்துக்களிலிருந்து வரும் இன்பங்கள், குறுகிய காலத்திற்கு மட்டும் நீடிப்பதுடன், இறுதியில் வேதனையையே கொண்டுவரும்."

"ஒவ்வொரு இரவும் நித்திரையில் நீங்கள் அமைதி மற்றும் ஆனந்தத்தின் ருசியைப் பெறுகிறீர்கள். நீங்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்பொழுது இறைவன் உங்களை சாந்தமான உயர் உணர்வு நிலையில் இருக்கச் செய்கின்றான். அந்நிலையில் இந்த வாழ்க்கையின் அனைத்து அச்சங்களும் கவலைகளும் மறக்கப்படுகின்றன. தியானத்தின் வாயிலாக நீங்கள் விழித்துள்ளபோதே, அத்தகைய தெய்வீக மனோ நிலையை அனுபவிப்பதுடன் ஆரோக்கியமான அமைதி நிலையில் இடையறாது அமிழ்ந்திருக்கவும் முடியும்."

மேலும் அவர் கூறுகிறார்: "தெய்வீக ஆனந்தம் எழும்பொழுது, என் சுவாசம் உடனடியாக நின்றுவிடுகிறது. நான் மெய்பொருளினுள் உயர்த்தப்படுகின்றேன். ஆயிரம் நித்திரைகளில் ஆனந்தம் ஒன்று திரண்டார்போன்று நான் உணர்கிறேன். ஆயினும் நான் என் சாதாரண உணர்வுநிலையை இழப்பதில்லை. உயர் உணர்வுநிலையில் ஆழ்ந்து செல்லும் அனைவருக்கும் ஏற்படும் பொதுவான அனுபவமும் இதுவே. இறைவனின் மிகவும் ஆழ்ந்த பரவசம் உங்களை மேவியதும், தேகம் பூரணமாக அசைவற்றுவிடுகிறது. சுவாசம் ஓடாமல் நின்று விடுகிறது; எண்ணங்கள் அடங்கிவிடுகின்றன. ஒவ்வொன்றும் ஆன்மாவின் வியத்தகு கட்டளையால் விரட்டப்படுகிறது. பிறகு நீங்கள் இறைவனின் பேரானந்தத்தைப் பருகி, ஆயிரம் மடக்கு மதுபானங்கூட அளிக்க முடியாத போதையை அனுபவிக்கின்றீர்கள். சாதாரண மனிதன் தூக்கத்தின் விளிம்பில் தூங்கிவிழும்பொழுது அவன் ஓரளவு இன்பத்தை அனுபவிக்கிறான். ஆனாலும் அவன் அந்த விழிப்புணர்வை விரைவாக இழந்து, தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறான். தூக்கம் முழுமையான உணர்வற்ற நிலையல்ல. ஏனெனில் விழித்தெழுந்ததும் நீங்கள் நன்றாக உறங்கினீர்களா, இல்லையா என்பது உங்களுக்கு எப்பொழுதும் தெரியும்."

நித்திரையில் பல வகைகள் உண்டு. சில மேலோட்டமானவை மற்றும் சில ஆழ்ந்தவை. ஆனால் மிகவும் ஆனந்தமயமான நித்திரையையும்விட அதிக போதை ஊட்டக்கூடியவை. இறைவனுடன் ஒருவர் உணர்வுபூர்வமாகப் பெறக்கூடிய அந்த ஆன்மீக அனுபவங்களாகும். நித்திரைதேசத்தின் மர்மங்களுக்கு அப்பால் இந்த எல்லா தெய்வீக இன்பங்களும் உள்ளன. நான் விரும்பும் எந்த நிலையிலும் என்னால் இருக்க முடியும். அநேக சமயங்களில் நான் நித்திரை தேசத்திற்கும், உலக விழிப்புணர்வு நிலைக்கும் இடையே உள்ள உயர் உணர்வு நிலையில் தங்குகிறேன்."

குருதேவர் கூறும் 'ஆன்மீகப் பரவசத்தின் உண்மையான நிலை' என்ற தலைப்பிற்கு ஒரு கதையை உதாரணமாகக் கூற விழைகின்றேன். அதைக் கீழ்கண்டவாறு தரப்பட்டுள்ளது. கதையின் தலைப்பு துன்பத்தின் முடிவு இன்பம்.'

"அரசன் ஒருவன் அரியணையில் வீற்றிருந்தான். அப்பொழுது அங்கு ஓடிவந்த ஒருவன், "அரசர் பெருமானே! நமது தலை நகரத்தை ஒட்டிய காட்டில் அற்புதமான சுனை ஒன்று உள்ளது. அதன் தண்ணீர் தேனைவிட இனிப்பாக உள்ளது. அப்படிப்பட்ட சுவையான தண்ணீரை நான் எங்கும் குடித்தது இல்லை. இந்த மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லவே இங்கு ஓடோடி வந்தேன்" என்று மூச்சு இறைக்கச் சொன்னான். "நானும் அமைச்சரும் வீரர்களுடன் வருகிறோம். எங்களை அந்த சுனைக்கு அழைத்துச்செல். நீ சொன்னது உண்மைதானா என்று அறிந்துகொள்கிறோம்" என்று சொன்னான் அரசன். எலோரும் புறப்பட்டனர். அவன் வழி காட்டிக்கொண்டே அவர்களை சுனை இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றான். அவர்கள் அனைவரும் அதிலிருந்து தண்ணீரை அள்ளிக்குடித்தனர். அவர்களுக்கு அது ஒன்றும் அதிக சுவை உடையதாகத் தெரியவில்லை. "நகரத்திலேயே இதைவிட இனிமையான தண்ணீர் உள்ளது" என்று சிலர் அரசனிடம் சொன்னார்கள். கோபத்துடன் அவனைப் பார்த்த அரசன் "நீயே இந்தத் தண்ணீரைக் குடித்துப்பார். நீ சொன்னபடி இது சுவையாக இல்லையே. ஏன்?" என்று கத்தினான். அவனும் அந்தச்சுனை நீரில் சிறிது அள்ளிக் குடித்தான். "அரசே!


குருப்ரியா

நான் குடித்தபோது இந்த நீர் மிகவும் இனித்தது. இப்பொழுது இது மற்ற நீரைப்போலதான் உள்ளது. இதற்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒரே மாயமாக உள்ளது.” என்றான். அமைச்சரைப் பார்த்து அரசன், “இவன் உண்மை பேசுகிறானா? இல்லை நம்மை ஏமாற்றிவிட்டு இப்பொழுது சமாளிக்கிறானா? ஒரே நாளுக்குள் எப்படி சுனை நீரின் சுவை மாறும்” என்று கேட்டான்.

அமைச்சர் அவனைப் பார்த்து “நீ எப்பொழுது முதன் முதலில் இந்தச் சுனையில் நீர் குடித்தாய்? சொல்” என்று கேட்டான். “நான் காட்டில் வழி தவறிவிட்டேன். எங்கெங்கோ அலைந்த எனக்குக் கடும் நாவறட்சி ஏற்பட்டது. குடிக்க நீர் கிடைக்காதா என்று அலைந்தேன். அப்பொழுது இந்தச்சுனை கண்ணில்பட்டது. இதிலிருந்து நீர் குடித்தேன். மிகவும் சுவையாக இருந்தது. அரசனிடம் சொல்ல ஓடோடி வந்தேன். எனக்கு வேறு ஒன்றும் தெரியாது” என்றான்.

அரசனைப்பார்த்து அமைச்சர் “நாவறட்சியோடு அலைந்த இவனுக்கு இந்த நீர் அமுதம்போல் சுவையாக இருந்ததில் வியப்பு இல்லை. கடும் முயற்சிக்குப்பின் கிடைக்கும் பொருள் மற்றவர் கண்ணுக்குச் சிறுமை உடையதாகத் தோன்றினாலும் அதைப் பெற்றவன் மிகப் பெருமையாகவே கருதுவான். இது உலகவிதி. இவன்மீது எந்தத் தவறும் இல்லை” என்று விளக்கம் தந்தார். இதுதான் கதை.

இந்தக் கதையிலிருந்து தெரியவருகிறது என்னவென்றால், காட்டில் வழிதவறிவிட்ட அந்த மனிதன் நெடுநேரம் சரியான வழி தேடி அலைந்துதிரிந்தான். அந்த இடம் காடாக இருந்ததனாலும் மனிதர்கள் யாரும் அங்கு இல்லாததாலும் அவனுக்கு சரியான வழியை கண்டுபிடிக்கத் தெரியவில்லை. அதனால், அவன் நீண்டநேரம் அலைய நேர்ந்தது. அதனால் அவனுக்கு நாவறட்சி ஏற்பட்டது. அவன் குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்ற ஆதங்கத்தில் அலையத் தொடங்கினான். இறுதியில் அவன் அந்தச் சுனையைக் கண்டான். வேண்டுமளவு தண்ணீரைப்பருகினான். அப்பொழுது அந்தத் தண்ணீர் மிகுந்த இனிமையாக இருந்ததை அவன் உணர்ந்தான். ஆனால், அவன் அரசனை அழைத்துவரும்போது அந்த நீரைக் குடிக்கையில் சாதாரண நீர்போல்தான் இருந்தது. அவன் வழிதெரியாமல் அலையும்போது உடலும் தளர்ந்து, நாவறட்சியும் ஏற்பட்டு மிகுந்த துன்பத்திற்கு ஆளானான். அந்த நேரத்தில் தண்ணீர் கிடைத்து. அதைப் பருகியதால் அவன் மிகுந்த இன்பத்தை அடைந்தான். அது தேனையும் விட இனிமையான இன்பமாக அவனுக்குத் தென்பட்டது.

குருதேவர் கூறும் ஆன்மீகப் பரவசத்தின் உண்மை நிலையும் இதுதான். எவ்வாறெனில், ஒருவன் இறைவனைக் காண கடும் முயற்சி எடுத்து அதனால் பல்வேறு துன்பங்களும் சோதனைகளும் ஏற்பட்டு அவற்றை அனுபவித்து, அவன் இனி இந்த உலகில் தனக்கு சாதிப்பதற்கு இறைவனைத்தவிர வேறு எதுவுமே இல்லை என்று உணர்ந்து அத்துடன் மிகுந்த அளவில் கஷ்டப்பட்டு செய்யும் முயற்சியினால் கிடைக்கும் இறை இன்பம் அல்லது பரவசநிலையில் அவனுடைய சுற்றுப்புறத்தையெல்லாம் மறந்து இறைவனுடன் ஐக்கியமாகும் நிலைதான் அந்த ‘ஆன்மீகப் பரவச நிலை’ என்பது என்னுடைய பணிவான கருத்து. அப்பொழுது எல்லாமே தேனைவிட மேலான சுவையாக இருக்கும் என்பதை இந்தக் கதையில் காட்டில் அலைந்தவன் முதன்முதலில் சுனைநீர் குடித்ததுபோல் இருக்கும் என்பதில் துளியும் சந்தேகமேயில்லை. அப்பொழுது எல்லா துன்பங்களுக்கும் முடிவு ஏற்படும். எல்லாம் இன்பமயமாக, பேரின்ப மயமாக இருக்கும். இந்த நிலை எல்லா மனிதர்களுக்கும் ஒரு நல்ல காலைவேளையில் உண்டாகும். ஏனென்றால் நாமெல்லாம் இறைவனின் குழந்தைகள். இறைவன் ஒருநாள் நம்மைத் தொடும்பொழுது அந்த நிலையை நாம் உணர்வோம். எவ்வாறெனில் இறைவன்தான் குருதேவருடைய ரூபத்தில் வந்து நமக்கு பாடத்தைக் கற்பிக்கிறார்..



மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# பெண்ணை ஆணாக்கிய சிவபெருமான்

உலகில் பக்திக்குக் கட்டுண்ட பரமன், தனது சிறந்த அடியார்களை பலவாறு சோதித்தபின்னர், அப்பக்தனை வெளிக்காட்டுவதில் வல்லவர். இந்த பூவுலகில் சிவபெருமான் ஆற்றிய எண்ணற்ற திருவிளையாடல்களில் பெண்ணையே ஆணாக மாற்றிய பெருமை கொண்டது இந்த மேல் சீஷ மங்கலத்தில்தான்.

ஆதியில் தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் வேண்டி, பாற்கடலைக் கடைந்தனர். அப்போது வாசுகி நாகம் கக்கிய ஆலகால விஷத்தின் வீரியம் தாங்காமல் பரிதவித்தனர் அமரர்கள். விஷயத்தை பிரம்மனிடம் தெரிவித்து,விமோசனம் கேட்டனர்.

அதற்கு பிரம்மா... கயிலாயத்தைவிடவும் சிவபரம்பொருள் மிகவும் விரும்பும் பூவுலகத் தலமான ஸ்ரீ வேதபுரி என்னும் திருவத்திபுரத்தில் வழிபடும்படி தேவர்களுக்கு அறிவுறுத்தினார். அதன்படியே பூவுலகம் அடைந்த முப்பத்து முக் கோடி தேவர்களும், ஈசன் மகிழ்ந்து வீற்றருளும் தலமான ஸ்ரீ வேதபுரி (செய்யார்) தலத்தை அடைந்து, நியமத்துடன் ஈஸ்வரரைப் பூஜித்தனர்.

மகிழ்ந்த மகேசர், தேவர்களுக்கு காட்சி தந்து, இத்தலத்திற்கு கீழ் திசையில் ஒரு குரோச தூரத்தில் [இப்போது உள்ள மேல் சீஷ மங்கலத்தில்] கமண்டல நாகநதிக்கு தென்பால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழிபட வேணுமாய் திருவருள் புரிந்தார்.

அப்படியே செய்த தேவர்களுக்கு இத்தலத் தினில் எழுந்தருளிய எம்பருமான் இரக்ஷனை வழங்கி, பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத் தை தனது கண்டத்தில் (தொண்டையில்) அடக்கி, அமரர்களோடு, அகிலத்தையும் காத்தருளினார்.

இதனால் இத்தல ஈசர் ஸ்ரீ மணிகண்டீசர் எனப் போற்றலானார்.

இதன் காரணமாக பிரதோஷ காலத்தில் இங்கு வந்து ஈசனை வழிபடுவது மிகுந்த புண் ணியத்தையும், பிறப்பில்லா தன்மையையும் தரும் என்கிறது தல புராணம்.

இந்த புராண வரலாறு செய்யாறு ஸ்ரீ வேத புரீஸ்வரர் ஆலய புராணத்தோடு தொடர்புடையது. இத்தலம் குறித்து ஆறு பாடல்கள் திருவத்திபுரம் புராண வரலாற்றில் இடம் பெற்றிருப்பது சான்றாக உள்ளது.

முன்னொரு சமயம் இத்தல ஈசனை ஓர் ஆதிசைவர் [சிவாச்சாரியார்] அனு தினமும் ஆகம விதி மாறாமல் அபிஷே கித்து, அர்ச்சனை புரிந்து வந்தார். ஒரு நாள்







(புருஷன்) வடிவில்) எல்லோருக்கும் தோற்றமளிக்கச் செய்தார்.

சில நாட்களில் அந்த ஆதிசைவர் உடல்நிலை சரியாகி மீண்டும் பூஜைகளை செவ்வனே செய்யத் துவங்கினார்.

(ஸ்த்ரீ) பெண்ணை ஆணாக (புருஷன்) மாற்றி அருளியதால் இப்பெருமான் ஸ்த்ரீபுருஷலிங்கம் எனப் போற்றப்பட்டார். அதுமுதல் ஸ்த்ரீபுருஷ மங்கலம் என்று அழைக்கப்பட்ட இவ்வூர் தற்போது மேல் சீஷமங்கலம் என்று மருவியுள்ளது.

இச்சம்பவத்தின் மூலம் இரண்டு உண்மைகள் நன்கு உணர்த்தப்படுகின்றது.

1. ஆதிசைவர் மட்டுமே சிவாலயத்தில் சிவபூஜை செய்ய உகந்தவர்.

2. ஆதிசைவர் நோயுறும் காலத்தில் அவரது துணைவியார் பூஜை புரியலாம்.

இவையிரண்டும் ஈசனே அருளிய ஆகமம் சொல்லும் ஆணித்தரமான உண்மைகளாகும்.

திடீரென நோயுற்றுப் படுத்தார். மணிகண்டீசர் மீது அளவற்ற அன்பு கொண்ட அந்த ஆதிசைவர், பெருமானுக்கு நித்திய பூஜை செய்ய முடியாமல் போனதை எண்ணி மிகவும் வருந்தினார்.

தனது உடல் வலியைவிடவும், ஈசனைபூஜிக்காத மனவலியால் துடித்தார். தனது மனைவி அங்கயற்க்கண்ணியை அழைத்தார். மணிகண்டீசரை பூஜிக்கும்படி அன்புக் கட்டளையிட்டார்.

தன் கணவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, கோவில் கருவறைக்குள் நுழைந்து, கயிலை நாதரை கருணை உள்ளத்தால் பூசனைப் புரிந்தார். இப்படியே சில நாட்கள் நடந்தது.

இதைப் பார்த்த ஊர்மக்கள் அறியாமையால், ஓர் பெண் கருவறைக்குள் சென்று சிவபூஜை செய்வது குற்றமென்று கருதி, அப்பெண்ணை தண்டிக்க திட்டமிட்டனர்.

இவற்றை அறிந்த அந்த ஆலால சுந்தரேஸ்வரர் அப்பெண்ணின் பக்திக்கும், ஆதிசைவரின் அன்பிற்கும் கட்டுப்பட்டு, நாள்தோறும் அப்பெண்ணை ஆண் வடிவில் (அதாவது அவளது கணவனது

ஊரின் தென்புறம் பேருந்து சாலைக்கு சற்று தள்ளி சிவாலயம் அமைதியான சூழலில் அற்புதமாக அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கிய தோரணவாயிலுடன் நாற்புறமும் மதில்கள் சூழ எழிலுற அமையப் பெற்றுள்ளது ஆலயம். முன்னே தேவர்கள் உண்டாக்கிய தேவ தீர்த்தம் காணப்படுகின்றது.

விசாலமான ஒரே பிராகாரத்தைக் கொண்டு விளங்குகின்றது. தென் பிராகார வலத்தைத் தொடங்கி, சற்றே வலப்புறம் திரும்பிட... முன் மண்டபம் வருகிறது. அதையடுத்து மூடுதளமாக மகா மண்டபமும், பின்னர் அர்த்த மண்டபமும் அமைந்துள்ளன.






கருவறையுள் கருணையே வடிவாய் திருவருள் பொழிகின்றார் ஸ்ரீ மணிகண்டீஸ்வரர். அற்புதங்கள பல நிகழ்த்திய பெருமானை வணங்கி, ஆலய வலம் வருகையில், தென்மேற்கில் கணபதி சன்னிதி கொண்டுள்ளார். அடுத்தபடியாக கந்தனும் ஆலயம் கொண்டு அருள்பாலிக்கின்றார். கோஷ்ட மாடங்களில் முறையை அமைந்துள்ள ஸ்ரீ நர்த்தன கணபதி, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீ பிரம்மா மற்றும் ஸ்ரீ துர்க்கையை வணங்குகின்றோம். ஈசனையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சண்டிகேஸ்வரரையும் நமஸ்கரிக்கின்றோம்.

பின் வாம பாகத்தில் தனிச் சன்னிதி கொண்டு இரட்சிக்கின்றாள் அன்னை. இச்சன்னிதியும் மூடுதளமாக மகா மண்டபத்துடன் திகழ்கிறது.

மூலஸ்தானத்தில் சிரித்த முகத் துடன் நின்றவண்ணம் திருக்காட்சி அருள்கின்றாள் ஸ்ரீ தர்மசம்வர்த்தினி என்னும் அறம் வளர்த்தநாயகி. காஞ்சி மாநகரில் 32 அறங்களைப் புரிந்ததனால் "அறம்வளர்த்தநாயகி" என்று போற்றப்படுகின்றாள் அன்னை பராசக்தி.

வடபிராகாரத்தில் பழமையான பெரிய வேப்ப மரமும், நாகர் மேடையும் அமைந் துள்ளன. மேற்கில் திருமண மண்டபம் ஒன்று உள்ளது.

சிறிய ஆலயம்தான். ஆனால் சிறப்புற பரா மரிக் கப்படுகின்றது. தினமும் ஒரு கால பூஜை நடக்கின்றது.

ஊர் பொதுமக்களின் பொறுப்பில் உள்ள இவ்வாலயத்தில் அனைத்து சிவாலய விசேடங் களும் சிறப்புற நடத்தப்படுகின்றன. இவ்வாலய கும்பாபிஷேகம் 2012ஆம் ஆண்டு நடந்துள்ளது. எப்போது வேண்டுமானாலும் இவ்வாலய தரிசனம் செய்யும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரிந்த தம்பதியர்கள் இங்கு பிரதோஷத்தன்று அபிஷேகப் பொருட்களை வாங்கித் தந்து, அய்யனையும், அம்மையையும் வேண்டிக்கொள்ள விரைவில் ஒன்று சேர்ந்து விடு கின்றனர். திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் உள்ள இவ்வூர். ஆரணி வாழைப்பந்தல் பேருந்து சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆரணி யிலிருந்து வாழைப்பந்தலுக்கு நிறைய பேருந்துகள் இயக்கப்படுகின்றன..


மோ.கணேஷ்

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள், ஆரணி,
தொடர்புக்கு: 9789156179.

# திருமந்திரம் கற்பிக்கும் கல்வி

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பதே கல்வியின் உண்மையான இலக்கணம். கற்க வேண்டியவற்றைப் பிழைகள் ஏதுமின்றி தெளிவாக கற்று, அதன் பிறகு கற்றதைத் தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதே இக்குறளின் பொருள்.

தெரியாததைத் தெரிந்துகொள்வதுதான் கல்வி என்றாலும், பொருளாதார அறிவோடு ஆன்மீக அறிவும் அவசியம் தேவை. பொதுவாகக் கல்வி என்பது வெறும் ஏட்டுக்கல்வியோடு மட்டும் நின்றுவிடுதல் கூடாது. ஏட்டுக்கல்வி என்பது நம்முடைய வாழ்வியலை வளப்படுத்தக்கூடிய பொருளாதாரத்திற்கு துணை செய்யுமே தவிர, ஆன்மாவை வளப்படுத்துவதற்கு ஆன்மீகக் கல்வி மட்டுமே உதவும். இத்தகைய ஆன்மிகக் கல்வியைத் திருமந்திரத்தில் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் திருமூலர்.

ஆன்மீகக் கல்வி என்பது உடல் மற்றும் உயிர் சார்ந்தது. இவற்றின் செயல்பாடுகள் பற்றியது. இதனை முறையாக உணர்ந்துகொண்டால்தான் நாம் முக்தியடைய முடியும். முக்தி அடைவதற்கான இந்த ஆன்மீகக் கல்வியைத் திருமூலர் வழி நாம் உணர்ந்துகொள்வதன் மூலம் பிறவாமையை நோக்கி நாமும் பயணிக்கலாம்.

இறை அனுபவத்தை உணர்ந்த ஒருவர், தான் உணர்ந்த அதே இறை அனுபவத் தை நாமும் உணர்ந்து மகிழும் வண்ணம் இறைவனி டம் வழிபடுத்துவதாக திருமந்திரத்தை அமைத்துள்ளார். எனவே, இறைக் கல்வியான இந்த ஆன்மீகக் கல்வியை நாமும் உணர்ந்துகொண்டோமானால் இறைநிலையை நாம் உணர்ந்துகொள்வதோடு மட்டுமல்லாது, பிறருக்கும் இறை அனுபவத்தை நெறிப்படுத்தலாம்.

செய்கின்ற பாவ புன்னியங்களின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் உயிர்கள் பிறவி எடுப்பதையும், உயிர்களின் மேல் கொண்ட கருணையினால் அவர்கள் எடுக்கின்ற உடலோடு உயிராக இறைவன் கலந்திருப்பதையும் என்னுடைய ஆன்மீகக் கல்வி அறிவின் காரணமாக நான் தெரிந்துகொண்டேன். இவற்றையெல்லாம்



படிப்பதன் மூலமாகவோ, கேட்பதன் மூலமாகவே கற்றுக்கொள்ள இயலாது.

இறைவனுடைய ஞானத்தினால் மட்டுமே கற்றுக்கொள்ள இயலும் என்று ஆன்மீகக் கல்வியைக் கற்றுக்கொள்ள இறைஞானம் அவசியம் என்ற இறைத் தத்துவத்தை

"குறிப்பிறந் தேன்உட லோடுயிர் கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே"

– (திருமூலர் திருமந்திரம் 290)

என்ற பாடல் வரிகளைக் கொண்டு உணர்த்துகின்றார் திருமூலர்.

குருவின் உதவியுடன் கற்றறிந்த உயிர்கள்> தாம் கற்றறிந்த கல்வியறிவை ஆராய்ந்துப் பார்த்தால்> அந்த அறிவுக்குள் ஒரு பேரறிவு இருப்பதை உணர்ந்துகொள்ள முடியும்;. இவ்வாறு உணர்ந்துகொண்ட பேரறிவினை எண்ணி தியானிக்க வேண்டும். இவ்வாறு தனக்குள்> தான் கற்ற கல்விக்குள் இருக்கின்ற பேரறிவினை உணர்ந்து கொள்பவரால் மட்டுமே> தன்னை நாடி வருபவர்களுக்கு வழிகாட்ட முடியும் என்று

குருவிற்கான கல்வி முறையினை...

"கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே"

– (திருமூலர் திருமந்திரம் 291)

என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

நம்முடைய உடலில் உயிர் இருக்கின்றகாலத்திலேயே என்றும் நிலைத்திருக்கக் கூடிய இறைவனுடைய பாதத்தைத் தன்னுடைய உள்ளத்தினுள் காணுகின்ற பேரறிவான ஞானக் கல்வியை தேடிக் கற்றுக் கொள்ளுங்கள்.

இக்கல்வியை முறையாகக் கற்றுக்கொண்டோமானால் எப்பிறவியிலும் நாம் செய்த பாவங்கள் அனைத்தும் நம்மை விட்டு விலகி அழிந்து போகும். இத்தகைய கல்வியைக் கற்றுக்கொள்ள சத்திய வாக்கு தவறாமல் இறைவனை மட்டுமே எண்ணிப் போற்றித் தொழுதுவர வேண்டும். அப்படித் தொழுதுவந்தால் இறைவனே மணி விளக்காக நம்முடைய உள்ளத்திற்குள் எழுந்து பேரறிவைத் தந்திடுவான் என்று ஆன்மீகக் கல்வியின் சிறப்பியல்புகளை...

"நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின்
தொழுதபின்
மற்றொன்று இலாத மணிவிளக் காமே"

– (திருமூலர் திருமந்திமை; பா–292)

என்ற பாடல் வரிகளில் உணர முடிகின்றது.

உலக ஞானத்தை மட்டும் அறிந்துகொள்ளும் கல்வியைக் மட்டும் கற்றுக்கொண்ட பலகோடி உயிர்கள், எப்போதும் பிறப்பது, வாழ்வது, இறப்பது என்ற நிலையிலேயே தொடர்கின்றன. எண்ணம் துளியும் சிதறாத மனமுடையவர்களோ ஆன்மீகக் கல்வியான ஞானக்கல்வியை சிறிது சிறிதாகக் கற்று, காலையும் மாலையும் இறைவனைப் போற்றி வழிபட்டு, சித்தக் குளிகையால் செம்பு பொன்னாவது போல இறைவனுடைய அருளால் அழிகின்ற உடலை என்றும் அழியாத காயகல்ப உடலாக மாற்றும் வல்லமையைப் பெற்று மகிழ்வர் என்று உடலியல் சார்ந்த கல்வி எது என்பதை...

"கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பாம்பரிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்தது காயமு மாமே"

– (திருமூலர் திருமந்திரம் பா – 293)

என்ற பாடல் வரிகளில் படம்பிடித்துக் காட்டு கின்றார்.

நீண்ட குச்சி ஒன்றை எடுத்துக்காண்பித்தால் உணவை உண்ண வரும் பறவைகள்விலகி ஓடிவிடுவது போல அற நூல்கள் கூறியவழிமுறைகளின்படி நடந்தால் உலக ஆசைகளைக் கொடுக்கும் ஐம்புலன்களும் நம்மைவிட்டு ஓடிவிடும். இத்தகைய கல்வியைக் கற்காமல் உலக ஆசைகளில் மயங்கிக் கிடந்து தங்களுடைய வாழ்வைத் தாங்களே இழந்துவிடுகின்றனர் என்று ஐம்புலன்களுக்கான கல்வியியலை>

"நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினால் பண்பின் பயன்கெடும்
கோலொன்று பற்றினால் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே"

– (திருமூலர் திருமந்திரம் பா – 295)

என்ற பாடல் வரிகளில் உணர முடிகின்றது.

தெளிந்த குருவினுடைய உதவியுடன்ஆன்மீகக் கல்வியை முழுமையாக உணர்ந்து கொண்டோமானால் மீண்டும் மீண்டும் பூமியில் பிறக்கின்ற நிலையிலிருந்து நீங்கி, மீண்டும் பிறக்காத வீடுபேற்றினை அடையலாம். மேலும், பிரம்மனின் படைக்கும் தொழிலையும், திருமாலினுடைய காக்கும் தொழிலையும், உருத்திரனின் அழிக்கும் தொழிலையும் தெளிந்து கொள்ளலாம். இவை மூன்றையும் தெரிந்துகொண்டோமானால் நம் முடைய பிறவி வினைகளைத் தீர்க்கும் வழியினையும் உணர்ந்து கொள்ளலாம் என்ற ஆன்மீகக் கல்வியை...

"மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பின்
அயன்பணி கேட்பது அரன்பணி யால்
சிவன்பணி கேட்பவர் தேவரும் ஆவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே

– (திருமூலர் திருமந்திரம் 302)

என்ற பாடல்வழி உணர்த்துகின்றார்.

எனவே பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கல்வியைக் கற்பதனால் பொருள் வளருமே தவிர அருள் வளராது. இறைவனுடையஅருள் நமக்குள் மளர வேண்டு மானால் இறைஆற்றலை முழுமையாக உணர்ந்து கொள்ளக் கூடிய ஆன்மீகக் கல்வியைக் கற்க வேண்டும். இக் கல்வியே இறைவனோடு நம்மை இணைக்கும்.



ப.கற்பகராமன்

முனைவர் ப. கற்பகராமன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
சோனாகலைமற்றும்
அறிவியல் கல்லூரி,
சேலம் 05.
போன்:9894210651

# இனிப்பு என்பது வெல்லத்தின் தன்மை! உனது தன்மை என்ன?

கீழே வரும் அற்புதத்தைப் பாருங்கள். கெட்டகுணம் என்ற கெட்ட தன்மையின் வழக்கமும் பொருளும் இதுவே. இது பலருக்கு உதவி செய்து வாழ்க்கையையும் தருகிறது. கிட்டத்தட்ட கெட்ட குணத்தை கொண்டு ஜீவராசிகள் முதல் மிருகம் பறவை இவைகள் வரை எதுவுமே இக்குணத்தை தொட்டதில்லை. அற்புத மான மனிதஉலகம் ஒன்றே இதை இன்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

❖❖❖

கெட்டது என்ற தீமை. இதனுடைய பொருள் மனிதனை இது மோசமாக்கி அவனை கீழ்நிலைக்குத் தள்ளிவிடுகிறது. இக்குணம் கண்டனத்திற்குரியது. கொடியது. தயவு செய்து எவருடைய இரத்தத்திலேனும் இது கலந்திருந்தால் அவர்கள் அதை கழுவிக் கொள்ளட்டும்.

❖❖❖

தாழ்மைகுணம் அல்லது அத்தன்மையைக் கொண்ட எண்ணம் இது மனிதனை அடிக்கடி மாறுபடச் செய்கிறது. இதற்கு காரணம் கெட்ட குணம் இரத்தத்தில் இருப்பதால்தான். இரத்ததானம் சாகும் உயிருக்கு நன்மையைத் தரலாம். அது வேறு ஆராய்ச்சி கொண்ட குணமாகும்.

❖❖❖

தீமை என்பதையே கெட்டுப்போன குணம் என்கிறார்கள். அதனால் தீயமனிதனாய் இருக்காதே. நீ தீயவனாய் இருப்பதற்கு உண்டான காரணங்களையும் சூழ்நிலைக் கொடுமைகளையும் உதார ணமாக காட்டாதே. தெளிவுள்ள மேதைகள் இதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தீயவர்களின் மத்தியில் இயேசுபிரான் வாழ்ந்ததை நினை.



❖❖❖

நான் உன்னை நேரடியாகக் கேட்கிறேன். பயமின்றி கோழையாக ஆகாமல் எவரும் சிந்திக்கும்படியாய் சொல். உனது அன்பான இரத்தத்தில் நல்ல குணம் தொனிக்கிறதா அல்லது தீயகுணம் தொனிக்கிறதா? மனித உதிரமே நல்லவை தீயவை என்ற குணங்களை பார்வை, காட்சி, உணர்ச்சி இவைகளை கொண்டு மூளையின் வழியாக பிரதிபலிக்கும். மனித உலகிற்கு நான் விடுக்கின்ற சிந்திக்கும் சவால் இதுவே. நற்குணம் நல்ல தன்மை இவைகளுக்கு நீ முன்னேறி நல்ல குருநாதர்களின் உபதேச அறிவுரைகளுக்காக நடந்து வந்து கேள். அதுவே சாந்தி தரும். போன பிறவியில் எனது ஆன்மகுருநாதன் சத்துவகுணம் படைத்த பகவான் புத்தனல்லவா?

❖❖❖

மனித உலகில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு எதையும் தேர்ந்தெடுக்க வழியே இல்லை. வாழ்க்கையில் அவர்கள் கொள்ள வேண்டியது ஒன்று நன்மை அல்லது தீமைகள் என்ற தன்மைதான். இதை ஆசையின் வழியாகவும் விவேகத்தின் வழியாகவும் கொள்ளலாம். எல்லோருக்கும் இத்தன்மை பிறவியிலிருந்து கிடைக்காது. சிலருக்கு பயிற்சியின் மூலமாக கொள்ள வேண்டியிருக்கும். வேறு சிலருக்கு பிறப்பிலிருந்தே இவைகள் வரும். இது எப்படி வருகிறது தெரியுமா? பெற்றோர்களின் ஜீவசக்தியின் வழியாகவும் பரம்பரையின் வழியாகவும் வருகிறது. இதற்கே ஆறு போல ஓடுகின்ற 'ஆற்றுநிலை' என்று பெயர். குருவைக் கொண்டு பயிற்சியின் வழியாக வந்தால் தாவுநிலை என்று பெயர்.

❖❖❖




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


நன்மை தீமை குணங்களை மனிதர்களிடம் மாற்றி அமைக்க முடியுமா? முடியாது. குணங்கள் மாறும் தன்மை கொண்டது அல்ல. மாறிக்கொள்ளுவது என்ற தற்காலிக நிலையே அறிவு ஆகும். இது கத்திமுனைப் பயிற்சியை போன்றது.

❖❖❖

உண்மையான பரிகாரம் என்ன என்று வினவினால் நீ உன்னை சிறிதளவு கெட்டவனாக மாற்றிக் கொள்ளுவதை போன்று சிறிதளவு நல்லவனாகவும் மாறலாம். அது எப்படி தெரியுமா? ஓயாமல் படிப்பதனாலும் கல்வி கற்பதனாலும் சொல்லிக் கொடுப்பதனாலும் நல்மக்களோடு இணங்குவதனாலும், நற்குணத்தாரோடு பழகுவதனா லும் உயர்ந்த கல்வியைப் பார்ப்பதனாலும் சிறிது சிறிதாக மாறிய நிலைக்குப் போகலாம்.

❖❖❖

'உங்களுடைய பலவீனத்தன்மை பொருந்திய இப்பணி உலகமக்களுக்கு நிச்சயமாகக் கிடைத்து அது மாற்றத்தை ஏற்படுத்துமா?' பதில் சொல்லுகிறேன். இப்பணியில் நான் என்னை நிச்சயமாக முன்நிறுத்திக் கொள்வேன். இதுமட்டும் என்னால் முடியும். மனிதர்களுள் நல்ல பெண்மணியாகவும் நல்ல ஆண்மகனாயும் இருப்பது அவரவர்களின் சொந்த முயற்சியே. கேள்வி கேட்கும் நீ உன்னை முதலில் ஒரு பெரிய ஆசிரியரிடம் உன்னை மாணாக்கனாக ஆக்கிக் கொள். அதுவே கடமையாகும்.

❖❖❖

'ஒரு கேள்வி உங்களிடம், கெட்டத்தன்மை என்ற இரத்த ஓட்டமுள்ள மனிதர்கள் நல்ல தன்மை அவர்களது குணத்தில் இல்லாதபொழுது பாதிக்கப்பட்ட அவர்களை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள், கற்பீர்கள், மாற்றுவீர்கள்'. அன்பனே உலகில் வேறு துறையிலுள்ள எந்த ஆசிரியர்களும் இதற்கு பயன்பட மாட்டார்கள். கட்டாயம் மதபோதகர்கள் மட்டுமே பயன்படுகிறார்கள். அவர்களிடம் பரிகாரம் தேடு. உலகக்கல்வி ஆசிரியர்கள் மற்றொரு மனிதனுடைய முழுமையான வாழ்க்கைத்தன்மையை தங்களிடம் பிரதிபலித்து காட்டமுடியாது. இதுவரை காட்டியதும் இல்லை. நன்மை தீமை இவைகளையும் அவர்களால் பிரதிபலிக்க முடியாது. பின்பு எப்படி? இதுவே உலகின் கதையாக இருக்கும்பொழுது மதபோதகர்களே நற்குணங்களுக்கு தேவை.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## தந்தையின் சாபத்தால்

# ராமனை சந்தித்த குகன்

கங்கை நதிக்கரையில் ஓர் அந்தண முனிவர் குடில் அமைத்து தவம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஒரு புதல்வன் இருந்தான்.

ஏழு ஆண்டுகளே நிரம்ப பெற்றவன் என்றாலும், வேதங்களில் சிறந்த தேர்ச்சி பெற்றவன். அன்பும், அடக்கமும், பண்பும் பணிவும் கொண்டவனாக திகழ்ந்தான். ஒரு நாள் முனிவரை நோக்கி அவரது மைந்தன், ‘தந்தையே! தெய்வங்களுள் சிறப்புடையது எது?’ என்றான்.

அதற்கு முனிவர், ‘மகனே! தெய்வங்களின் தனிப் பெரும் தலைவர் முருகப் பெருமான். அதனால் தான் அவர் தெய்வசிகாமணி என்று அழைக்கப்படுகிறார். தேவாதி தேவர்களும் போற்றும் முழுமுதற் கடவுள். மறைகள் போற்றும் மகாதேவன். முருகப்பெருமானை வழிபட்டால், அனைத்து தெய்வங்களையும் வணங்கியதற்கு சமமாகும். முருகனை வழிபாடு செய்வோர் பிறவிப் பெருங்கடலைக் கடப்பார்கள். முக்தி நலம் பெறுவார்கள்’ என்று கூறினார்.

சிறிது காலம் கழித்து முனிவர், புனித யாத்திரை புறப்பட்டுச் சென்றார். குடிலில் சிறுவன் மட்டுமே இருந்து இறைவனை நோக்கி தவம் செய்து வந்தான்.

இந்நிலையில் கங்கை நதிக்கரையோரம் இருந்த காட்டில் வேட்டையாட மன்னன் ஒருவன் வந்தான். அவன் ஒரு விலங்கின் மீது வைத்த குறி, தவறிப்போய் அங்கு தவம் செய்து கொண்டிருந்த முனிவரின் மீது



பட்டு, அவர் மாய்ந்து போனார். இதனால் அந்த மன்னனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.

அதன் பிடியில் இருந்து விடுபட கங்கை நதிக்கரையில் உள்ள ஆசிரமம் நோக்கி வந்தான் மன்னன். ஆனால் ஆசிரமத்தில் முனிவர் இல்லை. அவர் யாத்திரை சென்றுள்ளார் என்பதை அறிந்ததும் அவன் மன வருத்தத்துடன் அங்கிருந்து புறப்பட தயாரானான்.

ஆனால் முனிவரின் மகன், மன்னனை தடுத்து நிறுத்தினான். 'வேந்தனே! நீ என்ன காரணமாக வந்தாய்? உமக்கு என்ன கவலை?. என்னை சிறுவன் என்று எண்ண வேண்டாம். இருள் சூழ்ந்த வீட்டிற்குள், சிறுவன் விளக்கை எடுத்துச் சென்றாலும் இருள் விலகும்தானே!. ஆகையால் என்னை அலட்சியப்படுத்தாமல், உன் குறையைக் கூறு.

உன் கவலை விலக என்னால் வழிகாட்ட முடியும்' என்றான் அந்த சிறுவன். மன்னன் மனம் மகிழ்ந்து, தான் வந்ததன் நோக்கம் குறித்து அந்த சிறுவனிடம் எடுத்துரைத்தான். முனிவர் மகனோ, 'மன்னா! கவலைப்பாடாதீர். இந்த புனித கங்கையில் மூழ்கி, வடதிசை நோக்கி நின்று, மூன்று முறை உள்ளம் உருகி 'ஓம் முருகா' என்று கூறு. பிரம்மஹத்தி அகன்று விடும்' என்று விமோசனம் கூறினான். மன்னனும் அவ்வாறே செய்தான். அவன் பிரம்மஹத்தி தோஷம் விலகியது. அவன் மகிழ்வுடன் நாடு திரும்பினான்.

அதற்கடுத்த சில தினங்களில் யாத்திரை சென்ற முனிவர், ஆசிரமம் திரும்பினார்.

மகனை மகிழ்வுடன் தழுவி ஆசி கூறியவரின் கண்ணில் தேர் வந்ததற்கான அறிகுறி தென்பட்டது. 'மகனே! இங்கு தேர் சக்கரத்தின் சுவடு காணப்படுகிறதே. யார் வந்தார்கள்?' என்று கேட்டார். மகனும், மன்னன் வந்ததையும், அவனுக்கு தான் பரிகாரமாக 'ஓம் முருகா' என்ற மந்திரத்தை மும்முறை கூறும்படியும் அருளியதை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தான்.

முனிவருக்கு கோபம் எல்லைகடந்தது. 'முட்டாளே! நீ என் மகனா?. உனக்கு முருகனின் பெருமை தெரியவில்லையே. என்ன காரியம் செய்து விட்டாய்?. ஒரு முறை முருகா என்று கூறினாலே, ஆயிரம் பிரம்மஹத்தி தோஷம் விலகுமே. அதைவிடுத்து மும்முறை கூறச் சொல்லி முருகனின் பெருமையை சிறுமைபடுத்தி விட்டாயே. முருகன் பெருமையை அறியாத நீ, வேடனாக பிறப்பாயாக' என்று சாபம் கொடுத்தார். சிறுவன், தந்தையை வணங்கி பிழையை பொறுக்குமாறு வேண்டினான்.

முனிவர் சினம் தணிந்து, 'மகனே! நீ கங்கைக் கரையிலேயே பிறப்பாய். வேடனாக பிறந்தாலும், முருகன் நாமமே உனக்கு பெயராக விளங்கும். நற்குண சீலனாக திகழ்வாய். அந்த பிறவியில் உனக்கு ராமபிரான் நண்பனாகும் நலம்பெறுவாய்' என்று அருள் புரிந்தார்.

சாபத்தின் காரணமாக மறுபிறப்பில் கங்கைக் கரையில் வேடனாக பிறந்த அவன், குகன் என்று அழைக்கப்பட்டான். அயோத்தியில் இருந்து காட்டிற்கு வனவாசம் வந்தபோது, ராமபிரான் குகனை சந்தித்தார். முனிவர் தன் மகனுக்கு கொடுத்தது சாபம்தான் என்றாலும், அந்த சாபமே, ராமபிரானை சந்திக்கும் வரத்தை அவனுக்கு அளித்தது.







# சூலூரில் அமைந்துள்ள திருப்பதி திருக்கோவில்

சூலூர் அருகில் உள்ள RVS கல்விவளாகத்தில் குமரன் கோட்டம் கோவில் அருகில் விளங்குகிறது சூலூர் திருப்பதி திருக்கோவில். எழில் பொங்க ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீபத்மாவதி ஸமேத ஸ்ரீவெங் கடாசலபதியாக அருள்பாலிக்கிறார். திருமலை திருப்பதியில் தனியாக சேவை சாதிக்கிறார். ஆனால் சூலூர் திருப்பதி திருக்கோவிலில் கல்யாண திருக்கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி ஸமேதராய் அருள்பாலிக்கிறார். நாடி வரும் பக்தர் களை மெய்சிலிர்க்க வைக்கிறார்.

சூலூர் திருப்பதியில் உள்ள சன்னதிகள்:

ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீவெங்கடாசலபதி சன்னதி

ஸ்ரீபத்மாவதி தாயார் சன்னதி

ஸ்ரீலஷ்மி ஹயகீரிவர் சன்னதி

ஸ்ரீமஹா சரஸ்வதி சன்னதி

ஸ்ரீகருடன் சன்னதி

ஸ்ரீஅஞ்சநேயர் சன்னதி

ஆழ்வார்கள் சன்னதி

இந்த திருக்கோவிலில் நித்தியப்படி பூஜைகள் காலை 6.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும்.

வெள்ளிகிழமை மூலவர் மற்றும் பத்மாவதி தாயார் திருமஞ்சனம் நடைபெறும். திருவோணம் உத்ஸவர் திருமஞ்ஜனம், பிரதி மூலம் ஆஞ்சநேயர் மஹா சரஸ்வதி திருமஞ்ஜனமும் நடைபெறும்.

சித்திரை ஸ்ரீராமநவமி, ஸ்ரீமதுரகவி ஆழ்வார் திருநட்சத்திரம், ஸ்ரீஇராமநுஜர் ஜெயந்தி.

வைகாசி ஸ்ரீநரஸிம்ம ஜெயந்தி, ஸ்ரீநம்மாழ்வார் திருநட்சத்திரம்.

ஆனி பெரியாழ்வார் திருநட்சத்திரம்

ஆடி ஆடிப்பூரம் ஆண்டாள் திருக்கல்யாணம்

ஆவணி ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி திருக்கோவில் ஆண்டு விழா

புரட்டாசி நவராத்திரி உத்ஸவம், புரட்டாசி சனிக்கிழமைகள், ஸ்ரீவேதந்தா தேசிகள் திருநட்சத்திரம்.

ஐப்பசி தீபாவளி, ஸ்ரீமணவாளமாமுனிகள் திருநட்சத்திரம்.

கார்த்திகை திருகார்த்திகை, திருமங்கையாழ் வார், திருபாணாழ்வார் திருநட்சத்திரம்.

மார்கழி மார்கழி மாத பூஜைகள், ஸ்ரீவைகுண்ட ஏகாதசி, பகல் பத்து இராபத்து உத்ஸவம், ஸ்ரீஆஞ்சநேயர் ஜெயந்தி.







தை தைப்பொங்கல், திருமழிசையாழ்வார் திரு நட்சத்திரம்.

மாசி குலசேகராழ்வார் திருநட்சத்திரம்.

ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப் படுகின்றன. இங்கு வரும் பக்தர்கள் குடும்பத் துடன் வருகிறார்கள். அவர்களின் வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேறுவதால் மனநிறைவு, சுறுசுறுப்பு பெறுகிறார்கள்.

படிப்புத்தடை, திருமணத்தடை, முயற்சிகளில் தடை, எதிரிகள் தொந்தரவு, குடும்பத்தில் நிம்மதி யின்மை, வருமான தடை, கடன் தொந்தவு, கொரோனா, புற்றுநோய், கிட்னி பெயிலியர், சருமநோய் பாதிப்புகள், தம்பதி ஒற்றுமை குறைவு போன்ற மனித குலத்தை சித்ரவதை செய்யும் அத்தனை கொடுமைகளையும் சூலூர் திருப்பதி திருக்கோவில் ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீவெங்கடாசலபதி தீர்;த்து வைத்து ஆரோக்கியம், நிம்மதி, சந்தோஷம் நாடி வரும் அத்தனை பக்தர்களுக்கும் அளிப்பதால் நாளுக்கு நாள் இக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் கூடி வருகிறது.

இக்கோவில் அருகே ஆர்.வி.எஸ். கல்வி நிறுவனங்கள் பல இருப்பதால் அங்கு பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் தாங்கள் படிப்பில் சிறந்து விளங்க, நல்ல மதிப்பெண்கள் பெற இந்த கோவிலுக்கு வந்து நல்ல பலன்களை பெற்றதால் மாணவர்கள், மாணவிகள் கூட்டமும் இங்கு அதிகரித்து வருகிறது.

பெருமாளே துணை செய்யட்டும்
வரும் நாளை வளமாக்கட்டும்
என் நாளும் இனிதாகட்டும்
என் வாழ்வில் நலம் சேரட்டும்
நாராயணா ஸ்ரீமன் நாராயணா
நாராயணா ஓம் நமோ நாராயணா

என்று பாடல் பாடி இங்கே திருமாலின்திருவருள் வேண்டுகிறார்கள் பக்தர்கள் திருப்பதியில் ஒலிக்கும் ‘கோவிந்தா’ கோஷம் இங்கும் ஒலிப்ப தால் திருப்பதி தரிசனம் பெற்று விட்ட பூரிப்பில் இங்கு வரும் ஆண், பெண், குழந்தை பக்தர்கள் அனைவரும் குதூகலம் அடைகிறார்கள்.

முகவரி ஆர்.வி.எஸ்.சூலூர் திருப்பதி ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீவெங்கடாசலபதி திருக்கோவில் ‘குமரன் கோட்டம் வளாகம்’ கண்ணம்பாளையம் திருச்சி ரோடு, சூலூர் கோவை–641 402. தொலைபேசி: 8903423709.

– விஜயா கண்ணன்,
புது விளாங்குடி, மதுரை–625018.
Ph:8825729455

# பூமியை பிளந்து பக்தனை காத்த சிவன்

திருத்துறைப் பூண்டியிலிருந்து 3கி.மீ. தொலைவில் தண்டலைச்சேரி என்ற இடத்தில் அமைந்துள்ளது அருள்மிகு ஞானாம்பிகை அம்மன் உடனுறை நீற்நெறி நாதர் திருக்கோயில், திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து வழியில் வருவோர் கோயில் வாயிலில் இறங்கலாம்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் இது 110வது தலம் ஆகும். தேவாரப் பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 174 வது தேவாரத்தலம் ஆகும்.

அரிவாட்டாய நாயனார் அவதாரம் - முக்தி தலம். இத்தல இறைவருக்குத்தான் அரிவாட்டாய நாயனார் தினந்தோறும் செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் படைத்து வந்தார்; இவ்விறைவரே நாயனாருக்கு முக்தி கொடுத் தருளியவர்.

**அரிவாட்டாய நாயனார்:** தண்டலச்சேரிக்கு கிழக்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள கண்ண மங்கலம் என்ற ஊரில் (இந்த ஊர் தற்போது கண்ணந்தங்குடி என அழைக்கப்படுகிறது) வேளாளர் குலத்தில் தாயனார் என்ற சிவனடியார் அவதரித்தார்.

இத்தலத்தில் நந்தி புல்லைத் தினபதற்காக கழுத்தை திருப்பிய நிலையில் இருப்பதை இன்றும் பார்க்கலாம்.

குஷ்ட நோய் தீர்க்கும் தலம்.

இக்கோயில் கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயிலாகும்.

**இறைவர் திருப்பெயர்:** ஸ்திரபுத்தீஸ்வரர், நீற்நெறி நாதர்.



















**இறைவியார் திருப்பெயர்:** ஞானாம்பிகை.

**தல மரம்:** குருந்தை

**தீர்த்தம்:** ஓமக தீர்த்தம் (ஞானசித்தி விநாயகர் கோயிலின் எதிரில் நீராடல் சிறப்புடையது.)

**வழிபட்டோர்:** வியாக்ரபாதர், பதஞ்சலி.

**தல வரலாறு:** இத்தல இறைவருக்குத்தான் அரிவாட்டாய நாயனார் தினந்தோறும் செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் படைத்து வந்தார்; இவ்விறைவரே நாயனாருக்கு முக்தி கொடுத்தருளியவர்.

மக்கள் தற்போது 'தண்டலைச்சேரி ' என்றும் 'தண்டலச்சேரி' என்றும் வழங்குகின்றனர்.கோயில் பெயர் நீள் நெறி; ஊர் தண்டலை ஆகும். வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர் ஆகியோர் வழிபட்டு சிறப்பெய்தினர். தண்டலை என்பது இக்காலம் தண்டலைச்சேரி என வழங்கப் பெறுகின்றது. தேவாரம் பாடப்பெற்ற காலத்தில் ஊரின் பெயர் தண்டலை. இங்குள்ள கோயிலின் பெயர் நீள்நெறி.கோச்செங்கட் சோழன் தனது முன்பிறவியில் யானையினால் ஏற்பட்ட இடர் காரனமாக, யானை ஏறாத, ஏறமுடியாத மாடக் கோவில்கள் 70 கட்டினான் என்று வரலாறு கூறுகிறது.

அத்தகைய ஆலயங்களில் திருத்தண்டலை நீள்நெறி கோவிலும் ஒன்றாகும். இந்த பழமையான சிவன் கோயில் காலத்தின் கோலத்தால் சிதைந்து விட்டது. பிற்காலத்தில் தேவகோட்டை ராம. அருஅரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் இப்போதுள்ள கோயிலை கற்றளியாக கட்டித் தந்துள்ளார்கள். விமானங்கள் சுதை வேலைப் பாடுடையவை.

கோவிலுக்கு ஒரு முகப்பு வாயில் மட்டும் உள்ளது. முகப்பு வாயில் கடந்து உள் நுழைந்தால் முன் உள்ள முகப்பு மண்டபத்தில் கொடிமரத்து விநாயகர் உள்ளார். கொடிமரமில்லை.கொடிமர விநாயகர் அடுத்து பலிபீடம், நந்திஉள்ளன.








பிராகாரத்தில் விநாயகர் சந்நிதியும், கருவறையின் பின்புறத்திற்கு நேர் எதிரில் சிவலிங்கசந்நிதியும், தொடர்ந்து சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், வியாக்ரபாதர் பதஞ்சலி ஆகியோர் பூஜித்த சிவலிங்கங்கள், சூரியன், சந்திரன் முதலிய சந்நிதிகளும் உள்ளன.

அரிவாட்டாய நாயனார் அவர் மனைவி அரிசியும் மாவடுவும் கொட்டுவது, இறைவனின் திருக்கரம் வெளிப்பட்டு நாயனாரைத் தடுப்பது, நாயனாருக்கும் மனைவியாருக்கும் இறைவன் ரிஷபாரூடராகக் காட்சி தருவது முதலியவை சிற்பங்களாகக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளதைக் கண்டு மகிழலாம். உற்சவத் திருமேனிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நடராஜர், நால்வர், மனைவியுடன் அரிவாட்டாய நாயனார், கோச்செங்கட்சோழன் ஆகிய திருமேனிகள் சிறப்புடையவை. நடராஜ சபை வலதுபுறம்உள்ளது. சிவகாமி, மாணிக்க வாசகர் திருமேனிகள் உள்ளன. இத்தலத்திலுள்ள மூலவர் சிவலிங்கம் அழகான சிறிய திருமேனி. அம்பாள் சந்நிதி அழகாகவுள்ளது. கோஷ்ட மூர்த்தங்களாகத் தட்சிணாமூர்த்தி, துர்க்கைச் சந்நிதிகள் உள்ளன. துர்க்கை சந்நிதி தனி விமானத்துடன் உள்ளது.

விநாயகரை வணங்கி உட்செல்லும்போது, மேற்புறத்தில் இருமருங்கும் அரிவாட்டாய நாயனார் அவர் மனைவி அரிசியும் மாவடுவும் கொட்டுவது இறைவனின் திருக்கரம் வெளிப்பட்டு நாயனாரைத் தடுப்பது, நாயனாருக்கும் அவர்தம் மனைவியாருக்கும் இறைவன் ரிஷபாரூடராகக் காட்சி தருவது முதலியவை சிற்பங்களாக கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. அரிவாட்டாய நாயனார் குருபூசை அறுப்புத் திருவிழாவாகப் பெருவிழாவில் உரிய முறைப்படி நடத்தப்பெறுகிறது.

**அரிவாட்டாய நாயனார்:** தண்டலச்சேரிக்கு கிழக்கே சுமார் 2கி.மீ. தூரத்தில் உள்ளகண்ண மங்கலம் என்ற ஊரில் (இந்த ஊர் தற்போது கண்ணந்தங்குடி என



அழைக்கப்படுகிறது) வேளாளர் குலத்தில் தாய னார் என்ற சிவனடியார் அவதரித்தார்.

இவர் சிவனடியார்களிடத்தில் மிகவும்அன்பு கொண்டிருந்தார். தண்டலச்சேரியில் அருள்பாலிக் கும் இறைவனுக்கு நாள்தோறும் சம்பா அரிசியில் உணவும், செங்கீரையும், மாவடுவும் நைவேத்தியம் வைத்து வழிபாடு செய்து வந்தார். இவரது மனைவியும் இவரைப்போலவே இறைவனிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். இவர்களுக்கு ஒரு சமயம் வறுமை ஏற்பட்டது. வறுமையைக்கண்டு அடியார் மனம் தளராமல் தெய்வத்திருப்பணியை விடாமல் செய்து வந்தார்.

கூலிக்கு ஆள் வைத்து நெல் அறுத்து வந்த இவர், வறுமை காரணமாக தானே கூலிக்கு நெல் அறுக்க சென்றார். வேலைக்கு கூலியாக கிடைக்கும் நெல்லைக்கொண்டு இறைவனுக்கு நைவேத்தியம் செய்து வந்தார். பின்னரும் இவரை இறைவன் சோதிக்க நினைத்தார். இவருக்கு கூலியாக கிடைத்ததெல்லாம் இறைவனுக்கு நைவேத்தியம் செய்ததால், இவரது குடும்பத்திற்கு உணவில்லாமல் போனது.

இவரும் இவரது மனைவியும் கீரையை மட்டும் சாப்பிடத் தொடங்கினர். நாளடைவில் கீரைக்கும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது தண்ணீரை குடித்து வாழத்தொடங்கினர்.

இறைவனுக்கு நைவேத்தியம் செய்வதற்காவது நெல்கிடைக்கிறதே என்ற மகிழ்ச்சியில்வாழ்ந்து வந்தார் ஒரு நாள் இவர் இறைவனுக்கு நைவேத் தியம் படைப்பதற்காக செந்நெல், கீரை, மாவடு ஆகியவற்றை ஒரு கூடையில் சுமந்து கொண்டு புறப்பட்டார். சாப்பிடாததால் இவரை பசி வாட்டியது. மனைவிக்கும் பசி மயக்கம். தாய னார் பசியினால் கீழே விழப்போனார். அவரை மனைவி தாங்கி கொண்டார். கூடையில் சுமந்து வந்த நைவேத்தியப் பொருள்கள் நிலத்தில் விழுந்து சிதறின. தாயனார் மனம் கலங்கினர். அவருக்கு உயிர் வாழவே விருப்பமில்லை. எனவே தம்மிடம் நெல் அறுக்க வைத்திருந்த அரிவாளை எடுத்து தன் கழுத்தை அரிந்து கொள்ள துணிந்தார்.

அவரது பக்தியின் ஆவேசத்தை கண்டு உடன் வந்த மனைவி திகைத்தாள். தன் மாங்கல்யத்தை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டு இறைவனை வேண்டினாள்.அப்போது நைவேத்தியப் பொருள் விழுந்த இடத்தில் பூமியை பிளந்தவாறு வெடிப்பு ஏற்பட்டு, உள்ளிருந்து



ருத்ராட்ச மாலையும், திருநீரும் அணியப்பெற்ற திருக்கரம் ஒன்று வெளிப்பட்டது.. அத்திருக்கரம் தாயனாரின் கையைப்பற்றியது. மாவடுவை கடித்துச் சாப்பிடும் சப்தமும் கேட்டது.

இறைவனின் திருக்கரம் பட்டவுடன் மெய் மறந்து நின்றார் தாயனார். தாயனாரின் பக்தியை மெச்சிய இறைவன் இத்தலத்தில் பார்வதியுடன் தரிசனம் தந்தார். அரிவாளால் தம் கழுத்தை அரியத்துணிந்தமையால் இவருக்கு "அரிவாட்ட நாயனார்" என்ற சிறப்பு பெயர் ஏற்பட்டது.

**குஷ்டநோய்தீர்க்கும்தலம்:** கோச்செங்கண்ணன் என்ற சோழ மன்னன் சிவபெருமானுக்கு 70மாடக் கோயில்கள் கட்டியவன். ஒரு முறை இவனுக்கு குஷ்ட நோய் ஏற்பட்டது. நோய்தீர இவன் பல திருத்தலங்களுக்கு சென்றும் பயனில்லை. வருந்திய மன்னனுக்கு ஆறுதல் அளிக்க, சிவன் அசரீரியாக தோன்றி, "கல்மாடு புல் திங்கும் தலத்திற்கு சென்று வணங்கினால் உன் நோய் தீரும்"'என்றார். மன்னனும் அப்படி ஒரு தலம் தேடி அலைந்தான். இத்தலத்தில் வழிபாடு செய்ய வந்தபோது, சிவனுக்கு அணிவிக்க அருகம்புல்லால் ஆன மாலையை கையில் ஏந்தி வந்தான். அப்போது சிவனுக்கு எதிரில் இருந்த நந்தி அந்த அருகம்புல் மாலையை இழுத்து தின்றது. இதைக்கண்ட மன்னனுக்கு சிவன் கூறியது நினைவுக்கு வந்தது. அவனது குஷ்ட நோயும் நீங்கியது. மனம் மகிழ்ந்த மன்னன் இந்த கோயிலுக்கு திருப்பணி செய்து இறைவனை வழிபட்டான். இத்தலத்தில் நந்தி புல்லைத் தினபதற்காக கழுத்தை திருப்பிய நிலையில் இருப்பதை இன்றும் பார்க்கலாம்.



சிவத்திரு.குமரேசன்


– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in

இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

**aanmeegamalar.com**

இணையதளத்தை பார்க்கவும்























# மாசி மாதத்தின் சிறப்புக்களும் அற்புத பலன்களும்

- ❖ மகாவிஷ்ணுவாக அவதாரம் எடுத்தது மாசி மகத்திருநாளில் தான்.
- ❖ மாசி மாதத்து சங்கடஹர சதுர்த்தி மிக விசேஷம். அந் நாளில் விரதம் இருப்பவர்கள் எல்லாவித தோஷங்களிலிருந்தும் விடுபடுவர்.
- ❖ மாசி மாதத்தன்று தான் பார்வதிதேவி காளிந்தி நதியில் ஒரு தாமரை மலரில் வலம்புரிச் சங்காகத் தோன்றினாள்.
- ❖ சிவபெருமான் திரு விளையாடல்கள் பல புரிந்தது மாசிமாதத்தில் தான்.
- ❖ மாசி மாதத்தன்று மந்திர உபதேசம் பெறுவது சிறந்ததாகத் கருதப்படுகிறது.
- ❖ குலசேகர ஆழ்வார் மாசி மாதம் புனர்பூச நட்சத்திர நாளில் தான் அவதரித்தார்.
- ❖ அன்னதானத்தின் பெருமைகளை உணர்த்துவது மாசி மகம் தான்.
- ❖ மாசி மாத பூச நட்சத்திரம் தினத்தன்று தான் முருகப்பெருமான் சுவாமி மலையில் தன் தந்தை சிவபெருமானுக்கு உபதேசம் செய்தார்.
- ❖ பிரம்மஹத்தி போன்ற பெரும் பாவங்களைப் போக்கி பேய்க்கும் நற்கதி கொடுக்கும் இரு ஏகாதசிகள் வருவது மாசி மாதத்தில் தான்.
- ❖ உயர் படிப்பு படிக்க விரும்புபவர்கள் ஆராய்ச்சி செய்ய விரும்புபவர்கள் மாசிமக நாளில் அவற்றைத் தொடங்கினால் அதில் சிறந்து விளங்கலாம்.
- ❖ அகத்தியர் தன் விருப்பங்கள் நிறைவேற தவம் இருந்து அருள் பெற்றது மாசிமாதத்தில் தான்.
- ❖ காரடையான் நோன்பும் சாவித்ரி விரதமும் இம்மாதத்தில் வரும் விசேஷ விரதங்கள். மாசி மகத்தன்றுதான் காமதகன் விழா நடைபெறுகிறது.
- ❖ மாசி மாதத்தில் வீடு குடி போனால் வாடகை வீடாக இருந்தாலும் அவ் வீட்டில் அதிக நாட்கள் வாழ்வார்கள். எனவே இம்மாதத்தில் புது வீடு கிரகப்பிரவேசம் நடத்தலாம்.
- ❖ இம் மாதத்தை மாங்கல்ய மாதம் என்றும் கூறுவர்.
- ❖ மாசி மக நட்சத்திரத்தில் பிறப்போர் ஜனத்தை ஆள்வர் என்பதும் மாசிக் கயிறு பாசி

படியும் என்பதும் பழமொழி. இம் மாதத்தில் பெண்கள் புது மாங்கல்யச் சரடு கட்டிக் கொள்வது சிறப்பானது.

❖ மாசிமக புனித நீராடல் செய்ய இயலாதோர் மாசி மக புராணம் படிக்கலாம். அல்லது கேட்கலாம் அதுவும் புண்ணியமே.

❖ மாசி மகத்தன்று நெல்லையப்பர் கோவில் பொற்றாமரை தீர்த்தத்தில் திருநாவுக்கரசருக்கு தெப்ப விழா நடத்துவர். இதற்கு அப்பர் தெப்பம் எனப் பெயர்.

❖ மாசி மாதத்தில் அதிகாலை எழுந்து குளித்தபின் துளசியால் மகாவிஷ்ணுவை வழிபட்டால், வைகுண்டத்தில் இடம் கிடைக்கும்.


அழகுராஜா

❖ மாசிமக நாளில் அம்பிகையை குங்குமத்தால் அர்ச்சித்து வழிபடுபவர்களுக்கு, இன்பமும் வெற்றியும் தேடி வரும்.

❖ மாசி சுக்ல பக்ஷ பஞ்சமியில் ஸ்ரீசரஸ்வதி தேவியை மணமுள்ள மலர்களால் அலங்கரித்து வழிபட்டால்,கல்வியில் சிறந்து விளங்குவர்.

– தொகுப்பு: – முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# தோப்புக்கரணத்தின் நன்மைகள்

தோப்புக்கரணம் போட்டாலே போதும்யோகாசனத்தின் அனைத்துப் பலன்களும் கிடைத்து விடும்.

நமது முன்னோர்கள் வழிபாட்டின் ஒரு பகுதியாக தோப்புக்கரணத்தை வைத்திருந் தார்கள். உண்மையில் அது ஒரு நல்ல உடற் பயிற்சி.

தோப்புக்கரணம்போடும்போது காது மடல்களைப் பிடித்துக்கொள்கிறோம். காது மடல்களில்உடலின் எல்லா உறுப்புகளையும் இணைக்கிற புள்ளிகள் இருக்கின்றன.

காது மடல்களைப் பிடித்துத் தோப்புக் கரணம் போடும்போது உடலின் எல்லா உறுப்புகளுக்கும் செயல்படுவதற்கான தூண்டுதல் கிடைக்கிறது. உடல் இயக்கம் சீர்படுகிறது.

தோப்புக்கரணம் போட விரும்பும் ஒருவர், ஆரம்பத்தில் அவருடைய தோள்பட்டை அளவுக்குக் கால்களை விரித்து வைத்துக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும்.

பின்னர் பயிற்சியானவுடன் கால் களைச் சேர்த்து வைத்துக் கொண்டு தோப்புக்கரணம் போட வேண்டும்.

வலது கை விரல்களால் இடது காது மடல்களையும், இடது கை விரல்களால் வலது காது மடல்களையும் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழ வேண்டும்.

உட்காரும்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். எழும்போது மூச்சை வெளிவிட வேண்டும். இவ்வாறு மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவதால், நமது தண்டுவடத்தில் மூலாதாரத்தில் சக்தி உருவாகும். உட்கார்ந்து எழும்போது, காலில் உள்ள சோலியஸ் எனும் தசைக்கு வேலை கொடுக்கிறோம்.



உடல் முழுக்க இரத்த ஓட்டத்தை சீராக்கும் இத யத்தின் தசை களைப் போலவே இயங்கக் கூடியது, இந்த சோலியஸ் தசை. இத னால் உடல் முழுவதும் ரத்த ஓட்டம் சீராகும். மூன்று நிமிடங்கள் தோப்புக்கரணத்தைத் தொடர்ந்து செய்தால் வேறு எந்த உடற்பயிற்சியும் செய்ய வேண்டியதில்லை. இதை தொடர்ந்து செய்தால் அதிக பலன் பெறலாம்.






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

You Tube
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

மனதை ஒருமுகப்படுத்துவதனால் நமக்கு என்ன பயன் அல்லது பலன்கள் கிடைக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால், நாம் எந்தப்பணி செய்தாலும் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் மன ஒருமுகப்படுத்தி செய்யும்போது அதில் வெற்றி காணலாம். ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு ஞானத்தை நாம் விரைவில் அடையலாம். மனதினை ஒருமுகப்படுத்தும்போது தேவையில்லாத எண்ணங்கள் நம் மனதில் தோன்றி நமது மனதை துன்பப்படுத்துவதில்லை. மேலும் மனம் வீணாக சஞ்சலப்படுவதில்லை. மனோசக்தியானது இயல்பாக நம் மனதுக்குள் ஏற்பட்டு விடும். நமக்கு மன சஞ்சலம் , மன குழப்பம் போன்றவை என்பது இருக்காது. அவ்வாறு இருந்தாலும் அதை தாங்கிக் கொள்ளும் மனோசக்தி நமக்கு ஏற்பட்டு விடும். அதாவது நாம் மன பக்குவத்தை அடைந்து விடுவோம்.

மனதினை ஒருமுகப்படுத்தும் பயிற்சியை நாம் நாள்தோறும் தவறாமல் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும்போது மனதில் தேவையில்லாத எண்ணங்கள் துன்பங்கள் வந்தால் அவற்றை தடுப்பதற்கு நம் மனதுக்கு தேவையான கட்டளையிடுவதற்கு முடியும். நமது மனதை சிலவற்றை எண்ணாதே என்று மனதுக்குள் உணர்வுபூர்வமாக கட்டளையிட்டு விட்டால் மனதும் நமது கட்டளைக்கு கட்டுப்படும். கடவுள் நம் முன்னே தோன்றி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டால் உலகில் பெரும்பாலோனோர் நிரந்தரம் இல்லாத செல்வம், சொத்துகளைத்தான் வரிசைப்படுத்திக்கொண்டு முதலில் கேட்பான். அவன் இறுதியாக வேண்டாத விருப்பமாக மோட்சம் வேண்டும் என்று கேட்பான். மனிதன் ஏன் மோட்சத்தை இறுதியாகக் கேட்கிறான் என்றால் மோட்சம் அடைந்து விட்டால் இந்த உலக இன்பங்களை அனுபவிக்க முடியாது என்று மனதுக்குள் எண்ணிக்கொள்கிறான்.

மோட்சம் என்றால் மன நிறைவான ஆசை என்று பொருள்படும். மன அமைதி வேண்டுமென்று யாரும் கோவில்களில் சென்று கடவுளிடம் வேண்டுவதில்லை. பலபேர் வாழ்க்கையில் கஷ்டப்படுபோதுதான் கடவுளை நினைத்து கோயில் குளம் என்று சுற்றுவான். மனிதன் கஷ்டப்படாமல் மகிழ்ச்சியாக இருக்கும்போது ஏன் கடவுள் என்று ஒருத்தன் நம் கண்களுக்குத் தெரியாமலே இருக்கிறான். மனக்கஷ்டம் பணக்கஷ்டம் வரும்போதுதான் கடவுளைப்பற்றி அப்போதுதான் அவனுக்கு நினைவுக்கு வருகிறது. அதேபோல் அவன் அனுபவித்த கஷ்டங்கள் ஏதோ ஒருவிதத்தில் அவனை அறியாமல் மறைந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அப்போது அவன் மகிழ்ச்சியில் இன்பத்தில் மூழ்கி விடுகிறான். தன் கஷ்டங்களை கூறி தான் வேண்டிய கடவுளைப் பற்றி அப்போது மறந்து விடுகிறான். உலக வழக்கில் எவ்விதக்கஷ்டமும் இல்லாமல் மிகவும் சந்தோசமாக இருக்கும்போது ஜோதிடம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வருவதில்லை. அவன் அப்போது கிரகநிலைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. திடீரென்று தனக்கு தாங்கமுடியாத கஷ்டங்கள் வரும்போதுதான் அவன் கிரக நிலைகளைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் பரிகாரங்கள் செய்வதற்கும் ஜோதிடர்களை நாடுகிறான்.

துன்பத்திலும் இன்பத்திலும் கடவுளை மறக்காமல் நமக்கும் மேல் ஒரு சக்தி உலகில் இருக்கிறது என்று மனிதர்கள் எண்ணும்போது மன அமைதியுடன் வாழ்கிறான். என்ன கஷ்டம் வந்தாலும் மோட்சத்தை அடைந்தே தீருவேன் என்ற தீவிர எண்ணம் மனிதனுக்கு ஏற்படவேண்டும். தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருப்பவன் எப்படி மூச்சு விடுவதற்குத் தவிக்கிறானோ அப்படி மோட்சம் அடையவேண்டும் என்ற தவிப்பு மனதில் ஆர்வம் இருக்க வேண்டும். உலகில் காணும் இன்பங்களில் மூழ்கி உலகத்தில் காணும் இன்பங்களே நமது மன அமைதிக்கு துணை புரியும் என்று மனிதன் தவறாக நினைத்துக் கொண்டு இருக்கிறான். இது மனிதனுடைய தவறான முடிவு ஆகும். உலகில் காணும் இன்பங்களை நாம் தர்ம நியாயப்படி அனுபவிக்கலாம். ஆனால் உலக இன்பங்களில் மூழ்கி விடக்கூடாது.

35

உலகில் பற்றற்று வாழ்வது ஞானத்தின் வேதாந்தத்தின் முடிவாகும். எனவே நாம் மோட்சம் அடைய வேண்டும் என்று தீவிர ஆசை கொள்ள வேண்டும் என்று குரு சீடனிடம் கூறிகிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்று திருமூலர் கூறியதை சீடனுக்கு குருவிடம் கேள்வி கேட்கத் தோன்றி விடும். இந்த ஆசையானது முற்றும் துறந்த முனிவர்களுக்கு திருமூலர் கூறியது ஆகும். மனிதனும் ஈசனும் ஒன்று என்ற மனநிலை முற்றும் துறந்த முனிவர்களுக்கு வந்து விடும்.

அவர்களுக்குதான் உலகில் எப்பொருள் மீதும் ஆசைப்படக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்கு ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்று கூறப்பட்டது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மிதிலையை ஆட்சி புரிந்த மன்னன் ஜனகன் பற்றற்று வாழ்ந்தான் என்று இதிகாசம் கூறுகிறது.

அனைத்துப் பொருள்கள் மீதுள்ள ஆசைகளில் முதலில் நாம் விரும்பும் ஆசை மோட்சமாக இருக்க வேண்டும். நான் மோட்சத்தை அடைவதற்குத் தேவையான ஆசைகளை தவிர மற்ற ஆசைகள் எதுவும் எனக்கு வேண்டாம் என்ற மனதில் வைராக்கியம் மற்றும் ஆசை வர வேண்டும். பொதுவாக இந்த மோட்சம் அடையவேண்டும் என்ற ஆசை நமக்கு வந்து விடும்போது, உலகில் காணும் நிலையற்ற இன்பங்கள் ஆசைகள் இயல்பாகவே நம்மைவிட்டு மறைந்து விடும்.

ஒருவன் இசையில் நன்கு தேர்ச்சி பெறவேண்டும் என்றால் ஐஸ்கிரீம் போன்ற குளிர் பானங்களின் மீது ஆசையை அவன் இயல்பாக தவிர்த்து விடுவான். அதேபோல் ஒருவன் தனக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள மணக்க மணக்க உள்ள பில்டர் காபியை அருந்த நினைக்கிறான். அந்தக் காபியில் எதிர்பாராமல் ஒரு பல்லி விழுந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அவன் அந்த காப்பியை அருந்த விரும்புவானா? அந்தக் காபியை அருந்த ஆசை இருந்தும் அந்த ஆசையை விட்டு விடுகிறான். ஏன் என்றால் காபியில் பல்லி விழுந்திருப்பதை கண்டவுடன் தன்னோட ஆசையை இயல்பாகவே விட்டுவிட அவன் தயாராகி விடுகிறான்.

ஆசை இருந்தும் உலகில் உள்ள பொருள்களில் நிரந்தரமான இன்பங்கள் இல்லை. நிலையற்ற பொருள்கள் மீது ஆசை வைக்காமல் உலகில் மோட்சம் அடைவதுதான் நமது லட்சியம் என்று அவன் மனம் எண்ணி விடும்போது, அவன் தேடும் விரும்பும் மன அமைதி அவனைத் தேடி வந்து விடும். மனிதன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் மீது ஆசை வைத்துக் கொள்ளலாம் என்று சாஸ்திரங்கள் இதிகாசங்களும் கூறுகின்றன.

உலகில் உள்ள பொருள்களில் எது நிலையானது எவை நிலையற்றது என்பதை அறியும் ஞானம் வரும்போது அவன் தேடும் விரும்பும் மன அமைதி அவனுக்குள் வந்து விடும். அதேபோல் இந்த உலகில் வந்து மனிதனாய் பிறந்து விட்டாய், உலகில் உனக்கு உள்ள கடமைகளை செய்ய வேண்டும் என்றும், அதற்குப் பிறகுதான் மோட்சத்தை நாடுவதற்கு தீவிர முயற்சியை மேற்கொள்ள வேண்டும். என்று சாஸ்திரங்களும் இதிகாசங்களும் கூறுகின்றன. பெரும்பாலான மனிதர்கள் தங்கள் உலக கடமைகள் எல்லாம் முடிந்து விட்டாலும் அதில் இருந்து மீள்வதற்கு விரும்புவதில்லை. உலக இன்பத்திலே மூழ்கி விடுவதால் மோட்சத்தை பற்றி அவர்கள் நினைப்பதில்லை. மோட்சம் என்பது நிலையான ஆனந்தமான பேரின்பம் ஆகும். அந்த பேரின்பத்தை அடைந்து விட்டால் மனிதனுக்கு அமைதி அவனை விட்டு அகல்வதில்லை.

வயிற்றுப்பசியுடன் காணப்படும் ஒருவன் தான் சாப்பிடும் உணவின் ருசியினைப் பற்றி அப்போது அவன் கவலைபடுவதில்லை.அது போல் மோட்சத்தினை விரும்புகிறவன் உலகில் காணும் நிலையற்ற இன்பங்களை பற்றி எவ்வித கவலையும் கொள்வதில்லை. இந்த உலகத்தையும் அதில் காணும் பொருள்கள், உனது பந்தபாசங்கள் உறவுகள் மீது உன்னை வெறுத்து ஒதுக்கும்படியாகவோ உன்னை ஒதுங்கும்படியாகவோ சாஸ்திரங்கள், இதி காசங்கள், புராணங்களோ கூறவில்லை. நீ இந்த உலகத்தில் இரு. ஆனால் உலக இன்பங்களிலே மூழ்கி விடாதே என்றுதான் கூறுகிறது.

தாமரை இலைத் தண்ணீரைப்போல் உலகில் உன் கடமைகளை செய்து கொண்டிருக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகிறது. இதனைப் பற்றி நன்கு புரிந்து கொண்டவர்கள் உலகில் இன்பமாக மன அமைதியுடன் வாழ்கிறார்கள். இல்லறத்தில் இருந்து கொண்டு துறவற வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். வீடு வாகனம் மற்றும் உலகில் காணக்கூடிய பொருள்களினால் வரக்கூடிய இன்பங்கள், இந்திரியங்கள் மூலம் வரக்கூடிய இன்பங்கள் எல்லாம் நிலையில்லாதது என்பதை அறிந்துகொண்டு அதற்கு மனதளவில் அணை கட்ட வேண்டும். நிலையான பேரின்பமான மோட்சத்தை நாடுவதற்கு ஆன்மீக வழியில் முயற்சியினை மேற்கொள்ளவேண்டும்.

மனிதர்கள் யோகா (தியானம்) செய்யாமல் உலக போகத்தில் மூழ்கினால் அவனிடம் ரோகம்தான் வந்து சேரும்.. வாழ்வில் மன நிறைவு வர வேண்டும் என்று நினைத்து உலக இன்பங்களை அனுபவத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த இன்பங்களில் மயங்கி மூழ்கி



விடக்கூடாது என்று புராணங்களும் இதிகாசங்களும் சாஸ்திரங்களும் கூறுகின்றன. உலக ஆசைக்கு அளவே இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு மனதுக்கு ஒரு கட்டுப்பாடு விதித்து நமது ஆசைக்கு முடிவு செய்தல் வேண்டும் முடிவில்லாத ஆசையினால் விளையும் துன்பங்களைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும். உலக இன்பங்கள் எல்லாம் நிரந்தரம் அல்ல என்ற ஞானம் மனிதனுக்கு வந்து விடும்போது அவன் வாழ்வில் அமைதி தானாகவே வந்து சேரும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மோட்சம் அடைய வேண்டும் என்பது எல்லோருக்கும் ஆசை இருக்கும். ஆசை இருந்தால் மட்டும் போதாது. மோட்சம் வேண்டும் என்றால் தீவிரமாக நாம் ஆன்மீக வழியில் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். இச்சா சக்தியிலிருந்து ஞானசக்திக்குப் செல்வதற்கு குருவின் உபதேசங்களைக் கேட்டு அதன்படி தவறாமல் கடைபிடிக்க வேண்டும். இச்சா சக்தி என்றால் ஆசைப்படுதல் ஆகும். மோட்சம் அடைவதற்கு முதலில் ஆசைப்படுதல் வேண்டும். கிரியா சக்தி செயல்புரிவதற்கு சக்தி தேவை. அது கிரியா சக்தியாகும். ஞானசக்தி மூலம்தான் மோட்சம் என்னும் ஞானத்தை அடைய முடியும். மோட்சம் என்றால் நிறைவான வாழ்வு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒவ்வொருவரிடமும் அவர்களது ஆசைகள் பற்றி கேட்டால் பலவிதமான ஆசைகள் வரிசையாகத் தெரிவிப்பார்கள். சொத்து, பணம், புகழ் மற்றும் சுகமான வாழ்வு போன்றவற்றை தெரிவிப்பார்கள். ஆனால் மோட்சம் அடைய வேண்டும் என்று பெரும்பாலும் விரும்புவதில்லை. இவ்வுலகில் வாழும்வரை உலக இன்பங்களை அனுபவித்தால் போதும் என்றுதான் பெரும்பாலான மக்கள் நினைப்பார்கள். மோட்சம் அடைவதற்கு அதற்குரிய தகுதியான சாதனைகள் செய்து அதன்மூலம் மோட்சத்தை அடைய ஆசைப்படவேண்டும்.

புத்த பகவான் நிலையற்ற உலகப்பொருள்கள் மீது ஆசை படக்கூடாது என்று போதித்துள்ளார். ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்று ஞானிகள் கூறியுள்ளார்களே என்று கேட்கத் தோன்றும். ஞானிகள் நீயும் ஈசனும் ஒன்றுதான் வேறில்லை என்ற ஞானம் வந்தவர்களுக்கு மட்டும் ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசையை அறுமின் என்று ஆசையைப் பற்றி கூறியுள்ளார்கள் என்பதை இந்த இடத்தில் புரிந்து கொள்ள வேண்டும். ஞானத்தின் முடிவு நீயும் ஈசனும் ஒன்று ஆகும் என்பதை உணர்தலாகும்.

மோட்சம் அடைவதற்கு ஆசை இருக்கிறது. அந்த ஆசையை எப்படி நீங்கள் வளர்க்க வேண்டும் என்றால் நெருப்பை வளர்ப்பதுபோல் வளர்க்க வேண்டும். ஞானம் என்ற அறிவு அந்த இடத்தில் அவருக்கு வந்து விடுகிறது. அதேபோல் தனது இச்சைகளை எல்லாம் ஞானம் பெறுவதற்கு தக்கவாறு ஆசைகளை மாற்றிக் கொண்டு ஆன்மீக வழியில் பயிற்சியை மேற்கொள்ளவேண்டும். உலக இன்பங்களில் நிலையானது நிலையற்றது என்பதை பிரித்து அறியும் அறிவு வரவேண்டும். விவேகம் வந்து விட்டால் நிலையானது மீது இச்சை தானாக நமக்கு வந்து விடும். நிலையற்றது எது என்பதை அறிந்தவுடன் அதிலிருந்து நாம் விலகுவது என்ற அறிவு இயல்பாகவே வந்து விடும்.

மோட்சத்தை அடைய வேண்டும் என்ற ஞானம் வந்து விட்டால் நமது ஆசைகள் எல்லாம் படிப்படியாக குறைந்து விடும். தொடர்ந்துதொலைக் காட்சி பார்த்துக்கொண்டு இருப்பது கண்களுக்கு கெடுதல், கண்களைப் பாதிக்கும் என்று மருத்துவர் அறிவுறுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நமக்கு விருப்பமானவைகளை காணொளியாக ஒளிபரப்பினாலும் தொலைக்காட்சியை நாம் கண்டு மகிழ்வதற்கு நினைக்க மாட்டோம். தொலைக் காட்சி பார்ப்பதால் நமது கண்களுக்கு கெடுதல் வந்துவிடும் என்று பயந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதை தவிர்த்து விடுகிறோம்.

அதேபோல் உலகில் உள்ள இன்பங்கள் நிலையற்றவை என்ற அறிவு ஞானம் வந்து விட்டால் உலகில் காணும் இன்பங்களை வெறுத்து அல்லது அவைகளிலிருந்து விலகிக்கொண்டு மோட்சத்தின் மீது நாட்டம் ஏற்பட்டு விடும். மோட்சம் அடைய வேண்டும் ஆசை தீவிரமாக ஏற்படும்போது நமது உலகில் காணும் நிலையற்ற இன்பங்களை ஆசைகளை இயல்பாகவே துறக்க முடிவு செய்து விடுவோம். நமது ஆசைகளை கட்டுப்படுத்தும்போது நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



# விருப்ப சந்தா




உங்கள் சிறு உதவி எங்களுக்கு பேருதவியாகும்

ஆன்மிகமலர்.காம் இணையதளம் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கு

## விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்தியுள்ளோம்

சந்தா செலுத்த விரும்புபவர்களை வரவேற்கிறோம், விருப்பமில்லை என்றால் எவ்வித கட்டாயமும் கிடையாது, தொடர்ந்து நமது வாசகர்களாக தொடர்ந்து நமது இதழை படித்து பயன்பெறலாம்.

நமது சேவையில் பல்வேறு வளர்ச்சிப் பணிக்கு பொருளாதார ரீதியில் உதவி தேவைப்படுவதால் விருப்ப சந்தாவை அறிமுகப்படுத்துகிறோம்.

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI



நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ள அன்பர்கள் ரூ.10 முதல் விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)




AANMEEGA MALAR TRUST